# திராவிடநாடு

2 அணா


## திரும்பிப் பார்த்ததுண்டா?

[வாணிதாசன்]

திரும்பிப் பார்த்ததுண்டா?—தோழா!
திரும்பிப் பார்த்ததுண்டா?

அரும்பு மீசைத்தோழன் அடர்குளிர் மழையினால்
அங்கத்தை கைபோர்த்தி எங்கோ கிடப்பதை

நெருங்கிய சந்தினில் நீண்டதாழ் வாரத்தில்
அருந்த உணவின்றி ஆடைசிறிது மின்றி
சுருங்கிய வயிறோடு சோம்பிக் கிடக்கின்ற
உருவத்தை; இந்நாட்டின் எதிர்கால அரசனை

நம்நாட்டைத் தமிழ்நாட்டை நம்மரும் திருநாட்டை
நாமடைந்தா லன்றி வெருட்டுவமோ கேட்டை
சும்மா இருப்பதில் பயனில்லை தம்பி!
எழுந்திரு உன்னிரு தோள்களை நீநம்பி!

# காமராஜர் 'கல்லை'ச் சந்தனம்!

மக்களின் கருத்துக்குத் துளியும் மதிப்பளிக்காமல், 'மகா மேதை' என்ற மமதையுடன் எதேச்சாதிகாரம் செலுத்துகிறது 'ராஜாஜி' சர்க்கார் என்று எடுத்துக்காட்டப்பட்டபோது, காமராஜரின் ஆதரவாளர், ஆமாம்! ஆமாம்! அதில் என்ன சந்தேகம்!! ஆச்சாரியார் ஆட்சியின் ஆணவம் சகிக்கமுடியாததாக இருக்கிறது என்றனர். ஆட்சி கவிழ்ந்தது; மக்கள் மகத்தான திர்ப்பு அளித்தனர் என்று கூறி,நாடு, விழாக்கொண்டாடிற்று. யார் எதைச் சொன்னாலும், எவ்வளவு 'வினயமாக'ப் பேசினாலும், தமது போக்கை மாற்றிக்கொள்ளாது சர்வாதிகாரம் செலுத்துகிறார் ஆச்சாரியார் என்பது கண்டு மக்கள் வெகுண்டெழுந்தனர்.

காங்கிரஸ் வெற்றிக்குக் காரணமாக உள்ள ஊழியர்களை உதாசீனம் செய்வதும், உண்மைத் தியாகிகள் வாழ வழியற்ற நிலையில் இருப்பது கண்டு ஒரு துளி அக்கரை காட்டாமல் இருப்பதும், அவர்களின் 'ஜீவனோபாய'த்துக்காக நிலம் தருவதற்கு இசைவு அளிக்காமல் இருப்பதும், கொடுமை, துரோகம் என்று கண்டித்து — காமராஜர்போன்ற ஏழை பங்காளர்கள், தொண்டர்களின் தோழர், உண்மை ஊழியர், ஆட்சியில் இருந்தால், இப்படிப்பட்ட இறுமாப்பும் அலட்சியப்போக்குமா இருக்கும், ஏழைக்கு இதமளித்தல், தொண்டர்களுக்குத் துணை நிற்பது, தியாகிகளுக்கு நிலம் அளிப்பதுபோன்ற சிரியகாரியங்கள் நடைபெறுமே என்று கூறினர் — இவ்வழி செல்ல மறுத்த ஆச்சாரியார் ஆட்சியைக் கண்டித்தனர்-வன்மையாக.

*

வேலை இழந்து வேதனைப்படும் நிலைக்கு ஆயிரக்கணக்கானவர்களைத் துரத்துகிறோமே என்று ஒரு துளியும் 'பச்சாதாபப்படாமல்' டிராம்வேயைமூடிவிட்டார்களே,சர்க்கார் ஒரு பரிகாரமும் அளிக்கக்காணோமே, காமராஜர் போன்ற 'கர்மவீரர்' ஆட்சியில் அமர்ந்தால், டிராம்வே தொழிலாளிக்கு வந்துற்ற அவதி துடைக்கப்படுமல்லவா, டிராம்வே மீண்டும் நடைபெறுமல்லவா என்று மக்கள் கூறினர்—மறையவரின் ஆட்சியைக் கண்டித்தனர்.

*

மக்களின் 'எதிர்ப்பு'களை மதிக்க மறுத்தது, காங்கிரஸ் கட்சியின் கண்ணியத்தையும் கட்டுப்பாட்டினையும் பற்றித் துளியும் கவலைப்படாமல், காங்கிரசுக்குள்ளேயும், எண்ணிக்கை பலம் வளரும் வழி பற்றி மட்டுமே எண்ணி, தந்திரம் பல செய்து, மாணிக்கவேலரை அமைச்சராக்கிவிட்டாரே இந்த மாம்பலத்து மாக்கியவல்லி; இப்படி கொள்கையைக் குழி தோண்டிப் புதைக்கும் செயலில், காமராஜர் ஈடுபடுவாரா, காங்கிரசின் எதிரிகளின் கூடாரத்திலே 'குளிர்காய்'வது கேவலம், கட்சிக்கு இழைக்கும் துரோகம் என்றல்லவா காமராஜர் போன்ற கொள்கையாளர் நினைப்பர்--'பிடித்தவனுக்கெல்லாம் பெண்டாவது, இழுத்தவனுக்கெல்லாம் இதம் தருவது' என்பார்களே, அவ்விதமான இழி நிலைக்குக் கட்சியைக்கொண்டுசெல்வாரா —செச்சே! மீசை அரும்பாக் காலத்திலே தொடங்கி, தலை நரைத்திருக்கும் இன்றுவரை 'தொண்டு' செய்துவரும் தலைவர் காமராஜர், இப்படிச் செய்யமாட்டார்—என்று பேசிப் பெருமைப்பட்டனர்; ஆச்சாரியார் ஆட்சியைச் சாடினர், மக்கள்.

*

மக்களின் குரலை மதித்திடும் மாண்பு இருக்கிறதா இப்போது? இல்லை! **காமராஜர் ஆச்சாரியாராகத்தான் கொலு வீற்றிருக்கிறார்!!**

*

கூட்டமா—பூ! பூ!!—மகாநாடா—ஹெ! ஹே!! — தீர்மானமா? தூத்தூ! கிளர்ச்சியா? ஓஹோ!— என்று ஆச்சாரியார் பேசினார், கவிழ்ந்தார்! இப்போது, கூட்டம், மகாநாடு, கிளர்ச்சி, ஆகியவைகள் மூலம் மக்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்திருப்பது கண்டு, மதிப்பளிக்க ஆட்சி முன்வருகிறதா? இல்லை! ஆச்சாரியார் பதவியை விட்டு விலகினார்—ஆனால் ஆச்சாரியார் முறையைக் காமராஜர் விலக்கிவிடவில்லை—வெற்றிகரமாகக் கையாண்டு வருகிறார் இல்லையென்றால், 'கல்லக்குடி' கிடைத்திருக்குமே!

**டால்மியாபுரம்** ஆச்சாரியார் ஆட்சியில் இருந்தது—முறை மாறும், வழி பிறக்கும், நீதி கிடைக்கும், நேர்மை நிலைக்கும் என்று கூறிப் பூரித்தது, கொடுத்துள்ள பலன் என்ன? **டால்மியாபுரம், காமராஜர் ஆட்சியில் இருக்கிறது! மாறவில்லை!!**

*

மாணிக்கவேலர்! என்ற பதமே, அரசியல் 'அந்தர்பல்டி'க்கும், ஆட்சியாளர் கையாளும் அடுத்துக் கெடுக்கும் சூதுத் திட்டத்துக்கும் எடுத்துக்காட்டு என்று காரி உமிழ்ந்தது நாடு, ஆச்சாரியார் ஆட்சிக்காலத்தில். அழுக்குப் போக்கப்படும், அநீதி ஒழிக்கப்படும் என்று 'முரசு' கொட்டப்பட்ட பிறகு, ஆட்சிக்கு வந்தார் காமராஜ், —வந்தவரோ, மேளதாளத்தோடு இராமசாமி படையாச்சியாரைத் தமது மாணிக்கவேலராக்கிக்கொண்டார்!

முறை, எங்கே மாறிடக் கண்டோம்?

ஆச்சாரியாருக்கு, டிராம்வே தொழிலாளர் வேலை இழந்து வேதனைப்படுவதுபற்றிய அக்கரையில்லை என்று கண்டு, வெகுண்டவர் இன்று காண்பது என்ன? **டிராம்வேத் தொழிலாளர் பிரச்சினை என்ற ஒன்று இருப்பதையே அடியோடு மறந்துவிட்ட மன்னன் ஆட்சியில் இருப்பதைக் காண்கிறோம்!!**

அதற்கென்ன பார்க்கலாம்! இப்போதென்ன அவசரம்! என்று கூறி, குளிர வைக்கிறார், உள்ளங்களை அல்ல; ஏழையின் அடுப்புகளை!

தியாகிகளைக் கவனிக்காத ஆட்சியும் ஒரு ஆட்சியா — என்ற பேச்சிலே 'தீ' தெறித்தது-ஆச்சாரியார் ஆண்டபோது. இன்று? தியாகிகளுக்கு நிலம் தரும் பிரச்சினை எந்த அளவிலே இருக்கிறது என்று கேட்டால், புதிய ஆச்சாரியாராம் காமராஜர், புன்னகைகூடப் புரிவதில்லை, தெரியும்! தெரியும்! என்று கூறிக் கடுகடுக்கிறார்!

**கல்லக்குடி கிடைக்கவில்லை**

**டிராம்கள் ஓடவில்லை**

**தியாகிகளுக்கு வாழ்வளிக்கும் திட்டம் தரப்படவில்லை!**

**புதிய மாணிக்கவேலர்கள் உண்டாக்கப்படுகிறார்கள்!**

அடுத்த பக்கம் பார்க்க

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14] 13-11-55 [இதழ் 19

# 'தமிழ் எங்கள் மொழி....'

"மார்ஷல் புல்கானின் இங்கு 'விஜயம்' செய்கிறபோது அவருக்கு அளிக்கப்படும் வரவேற்புகள், ரஷிய மொழியிலும் இந்தி பாஷையிலும் மட்டுமே இருத்தல்வேண்டும்!"

இந்திப் பிரசார சபையின் வேண்டுகோள்போலும் என்கிறீர்களா!

இல்லை! இல்லை! இந்திய சர்க்காரின் தாக்கீது! இந்தியில்தான் வரவேற்பு இதழ்கள்!!

இராஜ்யங்களுக்கு டில்லி சர்க்கார் விடுத்துள்ள தாக்கீதில் இது தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

முத்தமிழ்! சங்கம் வளர்த்த தமிழ்!! பொதிகை முனிவன் தந்த தமிழ்! கண்ணுதற் பெருங்கடவுள் கழகமோடமர்ந்து பண்ணுறத் தந்த தமிழ்! —என்கிறீர்களா! — இவைகளை எங்காவது சங்கத்தில் பேசுங்கள்!! 'தீபாவளி' மலர்களில் கட்டுரையாக்குங்கள் -சர்க்கார், 'சரி தொலையட்டும்' என்று அனுமதிக்கும், ஆனால்,

புவியோர் போற்றிடும் புது முறை வகுத்தோய் வருக!

புத்துலகச் சிற்பியே வருக!

போர் வெறி மடிந்திடத் தளரரது உழைக்கும் தலைவா வருக!!

என்றெல்லாம் எழுதினீர்களோ, தீர்ந்தது—இந்திய சர்க்காரின் தாக்கீதின்படி, இவை வரவேற்பு இதழ்களாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா!! இந்தியில்தான் எழுதித் தர வேண்டும்!!

மூவாயிரம் ஆண்டுகளாக இருக்கும் மொழி! முடியுடைவேந்தர்கள் வளர்த்த மொழி! — என்றெல்லாம் கெஞ்சுவீர்கள், இந்திய சர்க்கார், இணங்காது — இந்திக்குத்தான் இடம்! யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம் என்ற பாரதி பாடலை, கோகிலகானத்தைவிட்டே பாடச்சொல்லிவிட்டு, அதற்குப் பிறகேனும், தமிழில் வரவேற்பு இதழ்கள் தரலாமா என்றும் யோசிக்க வேண்டாம் — அப்போதும் பலிக்காது!!

வெளிநாட்டிலிருந்து வரும் தலைவரின் கண்ணில், இந்திதான் தெரிய வேண்டும்-பிறமொழிகள், உன்னோடு, உன் வீட்டோடு!!

இந்தி மொழி ஆதிக்கம் செலுத்துகிறது என்று வீணாகக் கிளர்ச்சிக்காரர்கள் குழப்பம் விளைவிக்கப் பேசுகிறார்கள், இந்தி மொழி, இராஜ்யத்துக்கு இராஜ்யம் ஒரு தொடர்பு கொள்வதற்காக, வசதிக்காக உள்ள மொழி—வேறு அதற்கென்று மேலான, சிறப்பான 'அந்தஸ்து' ஏதும் தரப்படவில்லை—இந்தியைத் தமிழைவிட மேலானது என்று கூறுவோமா! செச்சே! நாங்களென்ன அப்படிப்பட்ட கிராதகர்களா! இந்தி தேசிய மொழி கூட அல்ல, நிர்வாக வசதிக்காக, தொடர்புக்காக உள்ள மொழி! என்று பேசிடக் கேட்கிறோம்—பெருந்தலைவர்கள் இப்போதெல்லாம் இதுபோல அடிக்கடி பேசுகிறார்கள்!

ஆனால் உலகத் தலைவர்கள் வரிசையிலே உயரிடம்பெற்றுத் திகழும் புல்கானின் பொருட்டு தயாரிக்கப்படும் வரவேற்பிதழிலே, இந்திதான் இருக்கவேண்டும் என்று தாக்கீது பிறக்கிறது!

இதன் பொருள் என்ன! இந்திதான் இத்தகைய உலகம் கவனிக்கும் சம்பவத்தின்போது உபயோகிக்கப்படவேண்டிய மொழி! பிறவெல்லாம், தொட்டில், கட்டில், கொட்டில் இவற்றோடு சரி!

**வெளி நாடுகளுடன் ஏற்படும் உடன்படிக்கைகளிலே 'இந்தி'தான் இருக்கும்!**

**நாணயங்களிலே இந்தி! அஞ்சல் அட்டைகளிலே இந்தி!**

**அலுவலக அறிவிப்புப் பலகைகளிலே இந்தி!**

**இரயில்வே நிலையங்களிலே இந்தி!**

**புல்கானின் பார்வைக்கு இந்தி!**

அவளுக்கென்ன குறைச்சல்! காலையிலேகூட, தலைவாழை இலையில்தான் சாப்பாடு! — என்றானாம் குறும்பன். எந்த மாளிகையிலே நடைபெற்ற விருந்திலே? என்று கேட்டானாம் சாது! மார்த்தாண்ட விலாச மாளிகையிலேதான்! என்றானாம் குறும்பன்! ஆச்சரியப்பட்ட சாது, மேலும் கேட்ட பிறகுதான் தெரிந்ததாம், மார்த்தாண்ட விலாச மாளிகை வாசலில் விருந்தினர் சாப்பிட்டான பிறகு வீசி எறியப்பட்ட வாழை இலையிலே, கிடைத்ததை வழித்தெடுத்துத் தின்றாள் அந்த வகையற்றவள் என்கிற உண்மை!

டில்லி, இதேவிதமான தலைவாழை இலையைத்தான் நமக்குத் தருகிறது!

இந்திக்கு இடம், எங்கெங்கு? உலக அவைகளில்! உலகம் புகழ் தலைவர்களின் வரவேற்புகளில்! ஆட்சி அலுவல்களில்! நாணயங்களில்! அஞ்சல் முறைகளில்!! தமிழ்? சேது(ப்பிள்ளை) பேச்சில், வையாபுரியார் எழுத்தில், கம்பர் விழாவில், காமராஜர் சொற்பொழிவில்!!

இந்திக்கு எந்தவகையான 'ஏற்றம்' தரப்படுகிறது என்பதற்கு, புல்கானின் வரவேற்புக்கு இந்திமட்டுமே இருத்தல் வேண்டும் என்ற இறுமாப்பும் எதேச்சாதிகாரமும், மொழி வெறியும் கொண்ட சர்க்கார் தாக்கீது, மறுக்கொணாத எடுத்துக்காட்டுத்தான் — ஆயினும் என்ன செய்வது—இந்தி ஆதிக்கம் என்பது சர்க்காரின் திட்டமல்ல என்று நம்பிடும் மன்னார்சாமிகள் இருக்கிறார்களே! மன்னார்சாமிகள், இருக்கவேண்டிய இடத்திலேயும் அல்லவே! ஆட்சி மன்றங்களில்!!

தமிழ் எங்கள் மொழி யென்பதாலே
இந்தத் தாழ்நிலை வந்ததின்று புவிமேலே!!

என்று வேண்டுமானால் நாமெல்லாம், பாடி அழலாம், அதற்கு அனுமதி உண்டு—144 இல்லாத நாட்களில்!! ★

*முன்பக்கத் தொடர்ச்சி*

*ஆனால், இவைகளைக் கூறி காமராஜர் ஆட்சியைக் கண்டிக்கலாமா என்றால், அதுதான் கூடாது! அது பஞ்சமாபாதகத்திலே மிஞ்சியதான படுபாதகமாகும் என்று போதிக்கப்படுகிறது!*

*ஆச்சாரியார் ஆட்சியின்போது ஆட்சி மன்றத் தலைவராக முடியாதுபோன, குன்னியூர்களுக்கு, காமராஜர் காலத்தில், பதவி, 'ஜாம் ஜாம்' என்று கிடைக்கிறது!*

*ஏன்? என்று மட்டும் கேட்கக் கூடாது!*

*கேட்டுவிட்டால், பார்ப்பனரிடம் கூடிக் குலாவும் பதர்காள்! பாசத்தையும் நேசத்தையும் பாழாக்கும் பாவிகாள்! என்று கூவிடும் 'குத்தகை'தாரர் குதித்தெழுகிறார். குத்தி மகிழ்கிறார்!*

*அண்ணேன்! இதுவும் அதுதான் போலிருக்கு — அடிக்கிற நாற்றத்தைப் பாரேன்—சகிக்கவில்லை—என்றானாம் ஒருவன்.*

*சிச்சீ! இது மலம் அல்ல—நாற்றத்தைப் பார்த்து அப்படிச் சொல்கிறாய் — 'கலர்' பார்த்தாயா, எப்படி இருக்கிறது என்று! சந்தனக் கலர்! சந்தனக் கலர்!!—என்றானாம் மற்றவன்.*

*ஆச்சாரியார் காலத்து ஆணவப் போக்கு இன்னும் இருக்கிறது—ஆனால், 'சந்தனக் கலர்' என்று கூறுகிறார் சல்லாபம் தரும் சுகத்தின் காரணமாக — சரியல்லவே நண்பரே! என்றாலோ, வாரி, வாரி மேலேயே வீசவே செய்கிறார்! காசும் கிடைக்கிறது இந்தக் காரியத்துக்கு என்கிறபோது, செய்யாமலா இருப்பார்! செய்யட்டும், செய்யட்டும், இதையேனும்!!*

★




**தம்பி,**

அமைச்சர் வருகிறார்! நேரு பண்டிதரிடம்கூட நெளித்த புருவத்துடன் பேசும் நிலைபெற்ற அமைச்சர் வருகிறார்!!

உள்நாட்டுப் பாதுகாப்புப் பொறுப்பு யாரிடம் இருக்கிறதோ, அப்படிப்பட்ட அமைச்சர் வருகிறார்!

உள்நாட்டுப் பாதுகாப்புப் பொறுப்பு என்றால், சாமான்யமானதா! இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம் விதித்திடும் ஆற்றல் இந்த அமைச்சரிடம் இருக்கிறது என்பது பொருள்!

'ஜாலியன்வாலா' நடக்கட்டும் என்று அவர் உத்தரவிட்டால் போதும், நூற்றுக்கணக்கான 'டயர்கள்' ஓடோடி வந்து தமது திறமையினைக் காட்டி, பட்டமும் பதக்கமும் பெற்று அவருக்குப் பணிவிடை புரியக் காத்துக் கிடக்கிறார்கள் என்று பொருள்!

வீடுகளைத் தரைமட்டமாக்குங்கள்! விம்மிடுவோருக்கு விலங்கிடுங்கள்! வீரம் பேசுவோரின் விலாவை நொறுக்குங்கள்! கண்டனக் குரல் கிளம்பினால், காட்டு மிருகங்களை வேட்டையாடுவதுபோல, துரத்தித் தாக்குங்கள் என்றெல்லாம் கட்டளைகள் பிறப்பிக்கும் வாய்ப்புப் பெற்றிருக்கிறவர் என்று பொருள்!

இந்தியத் துணைக்கண்ட முழுவதும் உள்ள 'போலீஸ் படைகள்' அவர் சுட்டு விரல் காட்டும் திக்கு நோக்கித் தாவும்! அது போதாதென்று அவர் கருதினால், பட்டாளத்தையும் வரவழைக்கமுடியும்.

கடும் தண்டனை!
கடும் தண்டனை!

காலை மாலை கன்றுகுட்டிக்கு
பாலை ஊட்டாதே
இந்தக் காவலன் இட்ட தடையை மீறி
வாலை ஆட்டாதே!

ஆட்டினால், கடுந்தண்டனை.

என்ற உடுமலைக் கவியின் பாடலை 'சொர்க்க வாசலில்' கேட்டதுண்டல்லவா — அதுபோன்ற தடை உத்தரவுகள் போடவும், கடுந் தண்டனைகளை விதிக்கவும் 'உரிமை' பெற்றவர் என்பது பொருள்!

பேச்சிலே, காரம் அதிகம்! போக்கு, பாதுஷா போன்றது!

இத்தகைய அமைச்சர் பண்டித பந்த் பவனி வருகிறார், உமது பிரதேசத்தைப் பார்வையிட வருகிறார், பராக்! பராக்! பச்சைப் பந்தல்களைப் போடுங்கள்! பாதைகளைச் செப்பனிட்டு வையுங்கள்; தோரணங்கள் கட்டுங்கள்! மலர்களை வாரித் தூவுங்கள்! மாலைகள் பலப் பல தொடுத்திடுங்கள்! அவர் அகமகிழ்வது உமக்குத்தான் நல்லது! புன்னகை பூத்த முகத்துடன் அவரை வரவேற்றால், புதுவாழ்வு கிடைத்திடும் உங்கட்கு. புகை கிளம்பக்கூடாது; பகை தெரியக் கூடாது. வருகிறவர், சாதாரண அமைச்சர் அல்ல; போலீஸ் மந்திரி!

தம்பி! நாகநாடு சென்றார், டில்லியில் தர்பார் நடாத்தும் பண்டித பந்த். அவர் 'விஜயம்' பற்றிய செய்தியை மிகச் சிரமப்பட்டு அசாம் சர்க்கார் பரப்பி, பண்டிதரின் பவனியை இரம்மியமான தாக்க முயன்றனர்.

நாகநாடு, உனக்குத் தெரியும்— விடுதலைக் கிளர்ச்சித் தீ கொழுந்து விட்டெரிந்துகொண்டிருக்கும் இடம் என்பது.

குற்றேவல் புரிந்து கிடந்திடும் வர்க்கமல்ல நாங்கள், நத்திப்பிழைத்திட மாட்டோம், கோடி கொட்டிக் கொடுத்தாலும் மாற்றானின் அடி வருடமாட்டோம், எமக்கு வீரவாழ்வு வேண்டும், தனி அரசு வேண்டும் என்று கூறிடும் விடுதலை வீரர்கள், அசாம் மாநிலத்துடன் இணைக்கப் பட்டுக் கிடக்கும் குன்றுகள் சூழ்ந்த நாகநாட்டிலே உள்ளனர். அவர்களின் விடுதலைக் கிளர்ச்சி காலை அரும்பி மாலை கருகும் என்று டில்லியில் பலமுறை 'ஆரூடம்' கணித்தனர்—எல்லா ஆரூடமும் பொய்த்துப்போய்விட்டன. விடுதலைக் கிளர்ச்சி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தவண்ணம் இருக்கிறது— ஏன் வளராது! குன்றேறி அந்நாட்டுக் குமரர்கள் காணும் தாயகத்தின் எழில், அடவிகளில் அருவிகளில், வயல்களில் வாழ்க்கை முறைகளில் தெரியும் தனித்தன்மை அவர்களைத் தன்னரசு பெறுகவேண்டும் என்ற ஆர்வத்தைக் கொள்ளச் செய்கிறது. பதவிக்குப் பல்லிளிக்கும் போக்கும், அடக்குமுறைக்கு அஞ்சிடும் தன்மையும், மலைக் காற்றினை உண்டு வளம் பெற்றுத் திகழும் அந்த மக்களிடம் எழமுடியாதல்லவா! தங்கத்தால் செய்த கூண்டு எனினும் அத்தை சிறையை விரும்புவதில்லையே. இரும்பை ஒடித்திடும் ஆற்றல் இல்லை என்பதையும் அறியாமல், சிறகடித்தவண்ணமல்லவா இருப்பது காண்கிறோம்.

பச்சைப் பசுங்கிளியே! உனக்குப் பாலும் பழமும் தந்திடுவேன்! என்று கொஞ்சினாலும் கிளியின் நினைவு அத்தனையும், பூங்கா மீது இருக்கும் அளவுக்கு, அன்பு பொழிந்திடும் அந்தப் பூவையிடம் இருப்பதில்லையே!

(14-ம் பக்கம் பார்க்க)

# 'தமிழரைப்பற்றிய தவறான கருத்துக்கள்'

## டாக்டர் மு. வரதராசனார்-பாண்டியன் அறிக்கை

சிக்காகோவிலுள்ள இயற்கை வரலாற்றுக் காட்சிச்சாலையில் தமிழர்களைக் குறித்துத் தவறான கருத்துக்கொண்ட ஒரு விளக்கம் அமைந்திருப்பதைப்பற்றி, 'தமிழ்நாடு' தலையங்கத்தில் கண்டித்து எழுதியது பொருத்தமே. தலையங்கத்தில் கூறியபடி வேண்டுமென்றே தமிழர்களை அவமதிப்பதற்காக இவ்விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று யாருங் கூற முடியாது. அறியாமையின் பாற்பட்ட தவறான கருத்தென்றே கொள்ளவேண்டும். ஆகவே இவ்வகையான அறியாமை பிறநாட்டாரிடம் இருப்பதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து அதை நீக்க முயலவேண்டும். இது தமிழர் கடமை.

பாரதியார் சொன்னபடி நமக்குள்ளேயே வீண்பெருமை பேசுவதன்றி, அவ்வாறு பெருமிதப்படுவதற்குத் தக்க காரணமுண்டு என்று உலகத்தாருக்கு அவர்கள் ஒப்புக்கொள்ளும் வகையில் எடுத்துக்காட்டத் தமிழர் யாரும் தகுந்த முயற்சி எடுக்கவில்லை. கால்டுவெல் என்ற ஆங்கிலப் பெருமகனார் நூறு ஆண்களுக்கு முன் இத்துறையில் செய்த பெருந்தொண்டிற்குப் பின் மதிக்கத்தக்க முயற்சி வேறு யாரும் எடுத்தாரில்லை.

அன்றியும், தமிழரல்லாத இந்தியர்களும், தமிழரிலேயே தமிழ்ப் பற்றுச்சிறிதுமில்லா தவகுப்பாரும், வடமொழியைப் பற்றியும் ஆரியப் பண்பாட்டைப்பற்றியும் சென்ற நூற்றைம்பது ஆண்டுகளாகப் பல துறைகளிலும் மேனாட்டார் ஒப்புக்கொள்ளும் வகையில் ஆராய்ச்சிகள் செய்து, மேனாட்டுப் புலவர்களையும், மேனாட்டுப் பல்கலைக் கழகங்களையும் அவ்வாராய்ச்சிகளில் ஈடுபடும்படி தூண்டி ஆங்கிலத்தில் ஆயிரக்கணக்கான நூல்களையும், பல இதழ்களையும் வெளியிட்டிருக்கின்றார்கள். அவர்களில் சிலர், ஆரிய வெறிகொண்டு உண்மையை மறைத்தும், திரித்தும் தமிழ்மொழிக்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் இழிவுதரும் கருத்துக்களைப் பரப்பியிருக்கிறார்கள். அக் கருத்துக்களைப் போதிய சான்றோடு மறுக்கத் தமிழர் முயற்சி எடுக்காததால், உலகத்தார் பெரும்பாலும் ஏற்றுக்கொண்டார்கள். இந்நிலை மாறவேண்டுமானால் தமிழர்களே பெருமுயற்சி எடுக்கவேண்டும். பிறரை நம்புவதில் பயனில்லை. பிறநாட்டிலுள்ள இந்தியத் தூது பணியாளர் பெரும்பான்மையும் ஆரியப் பற்றுள்ளோர். அவர்கள் முழு மனதுடன் தமிழர் இழிவைப் போக்கவோ, தமிழர் பெருமையைப் பரப்பவோ முயல்வார்களென்று நாம் எதிர்பார்க்கமுடியாது.

ஆகவே, மேற்குறிப்பிட்ட தலையங்கத்தின் இறுதியில் கூறியபடி சொல்லளவிலன்றிச் செயலளவில் தொண்டு செய்யும் ஆற்றலும் வாய்ப்புமுள்ள தமிழ்த் தலைவர்கள் இத்துறையில் இறங்கி வேண்டுவன செய்தால் மட்டுமே உலகத்தார் தமிழையும், தமிழரையும், மதிக்கும் நிலையேற்படும். தவறான கருத்துக்கள் அழிந்தொழியும்.

ஆனால் தமிழின் நிகரற்ற ஒலியமைப்பு, சொல்லமைப்பு, தமிழரின் கலை, பொருளாதாரம், அரசியல் முதலிய பல துறைகளில் ஒப்பியல் முறை மூலமும், வரலாற்று முறை வழியும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் எவ்வாறு சிறப்பான முன்னேற்றத்தையடைந்திருக்கிறார்களென்பதை நிலைநிறுத்த முடியும். அவ்வாறு நிலைநிறுத்த மேல்நாட்டார் கையாளும் தற்கால ஆராய்ச்சி முறைகளை நாம்பின்பற்றவேண்டும். இந்நோக்கத்துடன் தகுந்த நிலையங்கள் நிறுவி தமிழ்ப் புலவர்களை தமிழாராய்ச்சிகளில் ஈடுபடுத்தி ஆராய்ச்சி முடிவுகளை ஆங்கிலத்தில் நூல்கள் வழியாகவும் இதழ்கள் வாயிலாகவும் வெளியிட வேண்டும்.

நிற்க, தமிழ்க்கலை மன்றத்தார் தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு இவற்றின் சிறப்பை உலகறியப் பரப்பவேண்டுமென்ற நோக்கத்துடன் 'தமிழ்க்கலை, (Tamil Culture) என்ற ஆங்கில முத்திங்கள் இதழை வெளியிட்டு வருகிறார்கள். இவ்வகை முயற்சிகள் தமிழ்நாட்டில் பெருகவேண்டும். அம்முயற்சிகளுக்குத் தமிழன்பர்கள் சொல்லளவோடு நில்லாமல் செயலிலும் ஆதரவு கொடுக்கவேண்டும். அதுவே தமிழினப் பற்று அவர்களின் உள்ளத்தில் வேரூன்றியுள்ளது என்பதற்குச் சான்றாகும். அத்தகைய நல்லபற்று, உண்டாகி நாடெங்கும் வளர்ந்தால்தான், மேற்குறித்தது போன்ற தவறான கருத்து வெளிநாடுகளில் பரவாமல் தடுத்தல் இயலும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று உலக ஒற்றுமை குறித்து ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே முழங்கிய தமிழினம், இன்று நாகரிகமற்ற காட்டுமிராண்டிகளோடு ஒருங்கே கருதப்படும் இழிநிலையை எண்ணி எண்ணியேனும், ஆக்கப்பணிகளில் முனைந்து ஒன்றுபட்டுச் செயலாற்றுவது கடமையாகும்.

★

### ஒரு சிறு கதை

ஓ ஹென்றி எனும் ஆங்கில நூலாசிரியரின் சிறு கதைகள் மிகமிகப் புகழ் பெற்றவை, அவருடைய கதைகளில், அவர் காட்டும், திருப்பங்கள், சற்றும் எதிர்பாராதவையாக இருக்கும். சதா, ஏழ்மையுடன் போராடியதால், அவர் கதைகளில் அந்த எதிரொலியுமிருக்கும்.

இரண்டு தம்பதிகள்—தேனும் சுவையும்போல! நிலவும் வானும்போல! மிகவும், வசதி வாய்ந்தவர்களல்ல—சராசரி குடும்பம். எப்படியாவது தன்னுடைய கணவனுடைய கைக்கெடிகாரத்துக்கு, ஒரு அழகான சங்கிலி வாங்கிப் போடவேண்டும் என்பது அவளுடைய ஆசை. அதற்காகச் சிறுசிறு தொகையாகச் சேர்த்து வைத்திருந்தாள். அதேபோல, கணவனுக்கும் ஒரு ஆசை—தன்னுடைய அழகான மனைவியின் கூந்தலுக்கு, சீப்பு முதலிய அலங்காரப் பொருள்களை வாங்கிவந்து தரவேண்டும் என்று.

ஒருநாள், மாலை அவன் அலுவலகத்திலிருந்து வந்ததும், மனைவி ஓடினாள்—"இதோ பாருங்கள்! உங்களது கடிகாரத்துக்கு சங்கிலி வாங்கிவந்திருக்கிறேன்" என்றாள். அப்போதுதான், அவனும், மனைவியின் கூந்தலுக்கு வேண்டிய அலங்காரப் பொருள்களை, வாங்கி வந்திருந்தான்—தன்னுடைய கைக்கெடிகாரத்தை விற்று, அந்தத் தொகையைக்கொண்டு!!

# பேராசிரியர் இருதயராஜ் மறைந்தார்

திருச்சி சூசையப்பர் கல்லூரிப் பேராசிரியரும், நம் இதழில் தொடர்ந்து கட்டுரை எழுதிவந்தவரும், நம் இயக்க அனுதாபியுமான பேராசிரியர் ஏ. இருதயராஜ் எம். ஏ. அவர்கள் 5-11-55 மாலை 7-30 மணிக்கு இயற்கை எய்தினர்.

5-11-55 மாலை, கல்லூரியிலிருந்து வீடு திரும்பியதும், தோழர் என்.சாம்பு அவர்களின் இல்லத்திற்கு வந்து திருச்சி நகரசபை விஷயமாகப் பேசிக் கொண்டிருக்கும்போதே திடீரென்று மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தார்; உடன் உயிர் பிரிந்தது.

6-11-55 ஞாயிறு மாலை 5 மணிக்கு எடத் தெருவிலுள்ள அவர் வீட்டிலிருந்து, ஏராளமான இயக்கத்தோழர்களும், நகரசபை உறுப்பினர்களும், கல்லூரி ஆசிரியர்களும், மாணவ மாணவிகளும் அடங்கிய சவ ஊர்வலம் நடைபெற்று, இரவு 7 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது. திருவாளர்கள் இராட், நசருதீன், எம். எஸ். மணி, எஸ். பிரான்சிஸ், ரம்போலா மாஸ்கானுஸ் ஆகியோர் இறுதி வணக்கம் தெரிவித்து அவர் செய்த சேவைகளைப்பற்றிப் பேசினர்கள்.

தோழர் இருதயராஜ் அவர்களுக்கு வயது 36 ஆகிறது. அவர் 15 ஆண்டுகளாக கல்லூரிப் பேராசிரியராகவும், 8 ஆண்டுகளாக நகராண்மைக் கழக உறுப்பினராகவும் பணியாற்றி யுள்ளார். அவருக்கு ஒரு இளம் மனைவியும், இரண்டு ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் இருக்கின்றனர்.

பேராசிரியாக இருந்துகொண்டே பொதுநலப் பணியில் அரும்பாடுபட்டு உழைத்த பேராசிரியர் அவர்களது மறைவுகுறித்து, அவரை இழந்து தவிக்கும் உற்றார் உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்

# மறைந்தும் மறையாத மாணிக்கம்

திருச்சி சூசையப்பர் கல்லூரிப் பேராசிரியரும், திருச்சி நகரசபை அங்கத்தினருமான திரு. இருதயராஜ் எம். ஏ. அவர்கள் கடந்த சனி (5—11—55) அன்று இயற்கை எய்தினர் என்ற செய்தியை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன், நான் அவரது அருமை மாணவன் என்று கூறிக்கொள்வதில் பெருமையடைகிறேன். எங்கள் மாணவ நண்பர்கள் சார்பில் தந்தையின் பிரிவாற்றுமையால் வாடித் தவிக்கும் அவரது பிள்ளைக் கனியமுதுகளுக்கும், அவரது மனைவிக்கும் எங்கள் துக்கத்தைத்தெரிவித்துக்கொள்ளுகிறும்.

அவரது சவ அடக்கத்தின் பொழுது ஒருசேரத் திரண்டுவந்த ஆயிரக்கணக்கான மாணவ நண்பர்கள் விழிகளில் நீர் ததும்ப அவரது சவத்தின் பின்னே அணிவகுத்துவந்தகாட்சியும், சமயவேறுபாடின்றி, ஜாதி வேறுபாடின்றி, கிருத்துவர்களும், முஸ்லிம்களும், மற்றவர்களும் திரண்டுவந்து மலர் மாலை அணிவித்து அவருக்கு இறுதி மரியாதை செய்த காட்சியும் அவர் மக்களின் மத்தியில் எவ்வளவு நல்லவராக ஊன்றியிருந்தார் என்பதை செவ்வனே விளக்கிக் காட்டிற்று.

பேராசிரியர் இருதயராஜ் அவர்களுக்கு வயது 36-ஆகிறது. தமது எம். ஏ. பட்டம் பெற்று 15-ஆண்டுகள் திருச்சி சூசையப்பர் கல்லூரியில் சரித்திரம், பொருளாதாரம் கற்பிக்கும் பேராசிரியராகத் தொண்டாற்றினர். 8-ஆண்டுகள் நகரசபையின் அங்கத்தினராக இருந்தார். இந்தச்சிறியவயதினிலே அவர்மக்களின் நன்மதிப்பைப்பெற்ருர் என்ருல் அது அவரது சலியாத உழைப்பேயாகும் என்பது மிகையாது.

பொதுவாக நாம் கண்கூடாகக் காண்கின்றோம் பல ஆசிரியர்கள் பள்ளி அறைகளிலே பாடபுத்தகத்தை நடத்திவிட்டு மிகுந்த நேரங்களில் தம் குடும்பப் பொறுப்பைக் கவனிக்கவே நேரமில்லை என்று கூறுவதை. இதை நம் அன்ருட வாழ்க்கையிலும் பார்க்கிறோம். ஆனல் நமது பேராசிரியர் அப்படியில்லை. அவரிடம் இண்டர் வகுப்பில் நான் படித்தேன். பள்ளிப் பாடத்தோடு பல அரிய பகுத்தறிவுக்கருத்துக்களையும்அளிப்பார், தாம் செய்யவேண்டிய கடமையையும் உணர்ந்தார். யார் வந்து எது கேட்பினும் மறுக்காது அவர்களது இன்னல்களைத் துடைக்கப் பாடுபடுவார். நகரத்தின் நன்மைகளைக் கவனிக்கும் நல்ல மனிதராக வாழ்ந்தார். ஓய்வு நேரங்களில் பத்திரிகைகளிலும் பகுத்தறிவுக் கொள்கையினை பரப்பிப்பணியாற்றி வந்தார். உதாரணமாக 'திராவிட நாடு' பத்திரிகையில் 'அன்றும்—இன்றும் அரசியற் கருத்துக்கள்' என்ற தலைப்பில் புள்ளி விவரங்களோடு பகுத்தறிவுக்கொள்கையினைப் பரப்பினர். கடந்த 'முரசொலி' பொங்கல்மலரில் 'இலட்சிய பூமி' என்னும் தலைப்பிலும் எழுதினர். நல்லபண்பும், அன்பும்வாய்ந்த திராவிடத்தின் ஒளிவிளக்குகளில் ஒன்று அணைந்துவிட்டது. வகுப்பு அறையிலே நுழைந்தால் புன்னகை பூத்த அவரதுமுகத்தினைக்காணும் பேற்றையும் நாங்கள் இழந்துவிட்டோம். அண்ணு தமது அருமைத் தம்பிகளில் ஒருவரை இழந்துவிட்டார் நடமாடும் பல்கலைக் கழகம் நம் பேராசிரியர். அவர் இந்த நானிலத்தைவிட்டு மறைந்தார்.

"மனிதன் இந்த மண்ணில் ஒருநாள்தோன்றிமறைவது இயற்கை. இஃது உலகியல் வழக்கு. ஆனல் அவன் வாழ்க்கையின் இடைக்காலத்தில் செய்யவேண்டியவற்றை செய்யவேண்டும்" என்று ஒரு ஆங்கிலப் பேராசிரியர் கூறியுள்ளார். தாம் வாழ்ந்த நாளில் ஏழைகளுக்கு எத்தகைய நன்மைகள் வேண்டுமோ அவ்வளவும் செய்தார். உழைத்ததின் பயனுகவே அவர் உடல் உருக்குலைந்துவிட்டது. சனியன்று கல்லூரியில் பாடம்சொல்லிக் கொடுத்துவிட்டு வீடு சென்ற பேராசிரியர் துன்பம் எதுவும் இன்றி மாரடைப்பால் மரணமடைந்தார். மனிதன் தான் மறையும் பொழுது விட்டுச்செல்வது தான் செய்த நல்லவைகள்தான். அவைதான் காலத்தால் அழிக்க முடியாத புகழாகும். அவர் துவக்கிய பணியை நாம் தொடர்ந்து செய்யவேண்டும். ஒரு இருதயராஜ் தோன்றினர், மறைந்தார். பல இருதயராஜுகள் தோன்ற முடியும். தோன்றக்கூடும். ஆனல் அவர்களில் ஏ. இருதயராஜ் எம். ஏ. தோன்றமாட்டார். அவர் துவங்கி

விட்ட பணியை, கொள்கைகளை நாம்செய்யவேண்டும். அப்பொழுதுதான் அவரை நாம்மறவாமல் இருக்கிறோம் என்பதை நாடறியும். பேராசிரியர் சவ அடக்கத்தின் பொழுது நமது தி. மு. க. சார்பில் திரு. எம். எஸ். மணி அவர்கள் சிறந்த சொற்பொழிவாற்றினர். பேராசிரியர் தமது பொய்யுடம்பை துறந்தால் அவரது புகழுடம்பு நம் முடனே இருந்து நமக்கு வழிகாட்டியாக இருக்கும். அன்னன் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தாருக்கு என் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அன்பன்

**ம. சி. இராமமூர்த்தி**

பாலக்கரை, திருச்சிராப்பள்ளி

---

# யானை

(B. V.)

"கொஞ்சக்காலத்துக்கு முன்னால் நான் சயாமுக்குப் போய்வா நேர்ந்தது. நான் வந்த ஆகாசக் கப்பலிலேயே ஐந்து யானைகளும்வந்தன. இதை அறிந்த எனது பிள்ளைகள் என்னைப் பிய்த்துத்தின்ன ஆரம்பித்தனர், சதாகாலமும் யானையைப் பற்றிய பேச்சுத்தான்.

அவர்கள் கேட்ட கேள்விகளில் சில, "யானைகளைக் கண்டுபிடித்தவர் யார்?" "எதற்காக யானைகளைக் கண்டுபிடித்தனர்?" "துஷ்டப் பிள்ளைகளை யானை தின்றுபோடுவதுண்டா?" சர்க்கஸில் விளையாட்டுப் போட அவற்றுக்கு விருப்பம் தானா?"

இதற்கு எந்தப் 'பிரம்மா'வால் தான் பதில் சொல்லமுடியும்?

துஷ்டப் பையன்கள் பிறக்காத காலத்திலேயே யானை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

யானைகளைப் பற்றிய ஆச்சரியமான பல விஷயங்களை அறியும் பொருட்டுத் தம் வாழ்நாளையே அர்ப்பணித்த பெரியார் ஒருவர் இருந்தார். பலஇலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே யானைகள் இருந்ததாக அவர் கூறுகிறார். யானைகளில் சுமார் 300 இனங்கள் முன்பு இருந்தன. இன்றோ அவற்றில் இரண்டுவகை மாத்திரம் உள்ளன. அவை இன்றைய ஆபிரிக்க இந்தியக்காடுகளில் உள்ளன. மற்ற 298 இனங்களும் செத்துப்போய்விட்டன.

ஆதிகாலத்து யானை 2 அடி உயரமே இருந்தது. அதற்குத் துதிக்கை கிடையாது, வரவர அவற்றின் தந்தங்கள் என்ன காரணத்தாலோ நீண்டு வளர ஆரம்பித்தன. இதனால் உணவுப் பொருட்களை வாயால் கௌவ முடியாது போயிற்று. அதன் காரணமாகத் துதிக்கை வளர்ந்தது.

சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மேனாட்டிலும் யானைகள் இருந்தன. அங்குள்ள "கௌற்" எனும் இடத்தில் சில போர் வீரர்கள் ஆழமான ஒரு குழி தோண்டிக் கொண்டிருந்தபோது, திடீரென்று ஒரு யானை எலும்புக் கூட்டைக் கண்டுபிடித்தனர். அது 14 அடி உயரம் இருந்தது. நன்கு வளர்ந்த இன்றைய ஆபிரிக்க யானைகள் அதில் 2 அடி உயரம் குறைந்தவை.

நன்கு வளர்ந்த ஒரு ஆபிரிக்க யானையொன்றின் நிறை 7 முதல் எட்டு டன் வரை இருக்கிறது. இந்திய யானை ஆறு டன் வரையுள்ளது. இவ்வளவு பாரமான யானையைத் திமிங்கலத்துடன் ஒப்பிட்டால் எவ்வளவோ சிறியதாய் விடுகிறது. திமிங்கிலம் 120 டன் நிறையுள்ளது. இதையெல்லாம் எனது பிள்ளைகள் அறிந்திருக்கவில்லைப் போலிருக்கிறது. இல்லாவிட்டால் இவ்வளவு சிறிய பிராணியான இந்த யானையைக் கண்டு அவர்கள் இவ்வளவு தூரம் ஆச்சரியப் படுவார்களா என்ன?

யானைக்குட்டி ஒவ்வொன்றும் 200-இருத்தல் இருக்கும். நம்மை அம்மா ஏந்திச் செல்லுவதுபோல், இவற்றையும் அவற்றின் 'அம்மா' யானை தூக்கிச் செல்லும். மனிதனால் சிறைப்படுத்தப்பட்ட யானைகள் 60-முதல் 70-ஆண்டுவரை உயிரோடிருக்கின்றன. ஆனால்காடு வனாந்தரங்களில் வாழும், யானைகள் எத்தனை வயதுவரை இருக்கின்றனவோ யாருக்குத்தெரியும்?

யானைகளுக்கு ஆறுதடவை பல் விழுந்து முளைக்கிறது. அவற்றின் காதல் வாழ்க்கை நம்மைப்போன்றதல்ல. ஆணும் பெண்ணுமாக முதலில் ஒன்றின் துதிக்கையுடன் மற்றதின் துதிக்கையைக் கோர்த்துக்கொண்டே உலவும். இப்படி இரண்டுமாதகாலம் உலவிய பின்தான் இருவரும் பொருத்தமானவர்களா இல்லையா என்பதை உணர்கின்றன.

இந்தக் காதல் மணம் ஏற்பட்ட எத்தனை மாதங்களுக்குப் பிறகு "குட்டிப்பயல்" பிறப்பான்? பத்து மாதமென்று ஒரு சாராரும் 22-மாதமென்று இன்னொரு சாராரும் கூறுகின்றனர்.

ஆபிரிக்க யானைகளின் காது மிகப் பெரியது. சில சமயங்களில் தப்பித்தவறி அவற்றின் காதுகள் தோள்பட்டையில் அகப்பட்டுக் கொண்டால் பின் அவ்வளவுதான், பாவம் அவற்றால் எழும்பவே முடியாது!

இந்தக் காலத்திலெல்லாம் யானைகள் கிடைப்பது மிகவும் அரிதாகவிருக்கிறது. பர்மா, சயாம் காடுகளில் உள்ள பழக்கப்பட யானைகள் ஒவ்வொன்றும் 5,000-பவுன் பெறுமதியுள்ளவை.

யானைகளுக்கு இனிப்பென்றால் ஒரே பைத்தியம்தான். சர்க்கரை வள்ளிக்கிழங்கு, கரும்பு முதலியவற்றைக் காட்டி, மற்ற மிருகங்களையும்விட அதிவிரைவில் இவற்றைப் பழக்கிவிடலாம். ஆகாசக் கப்பலில் என்னோடு பறந்துவந்த ஐந்து யானைகளும் மூன்று மாசங்களுக்கு முன்பு சயாமில் உள்ள காடுகளில் உலவிக் கொண்டிருந்தவை. இன்னும் சில மாதங்களில் இவைஸர்க்கஸ்களில் விளையாட்டுக் காட்டிக்கொண்டிருக்கும்.

—'சுதந்திரன்.'

---

ஆடம்பரமான ஒருமாது. ஒரு நாள் பேரறிஞர் பெர்னாட்ஷாவிடம் வந்து பேசிக்கொண்டிருந்தாள்.

"மிஸ்டர் ஷா! எனக்கு என்ன வயது இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?"

ஷா, அந்த மாதை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "பற்களைப் பார்க்கும் போது உன் வயது 18 இருக்கும் என்றே நினைக்கிறேன்; கூந்தலோ 19 இருக்கலாம் என்று சொல்கிறது; ஆனால் உன் நடையும் பேச்சுமோ 14க்கு மேல் இருக்க முடியாது என்று நினைக்கத் தூண்டுகிறது." என்றார்.

மகிழ்ந்துபோய்விட்டாள் அம்மாது! ஆனால், அதைத் தொடர்ந்துமேலும் விவரித்தார் ஷா, "அம்மா! ஒவ்வொன்றையும் கூட்டிப்பார்த்தால் எத்தனை வருகிறது. 51 அல்லவா? அதுதான் உன்னுடைய வயதாக இருக்க முடியும் என்று எண்ணுகிறேன்!"

# இருளில் ஒளி

சி.என்.அண்ணாதுரை

"பிறருக்கு உபதேசம் செய்வது எளிது, தானே அதைச் செயலில் செய்து காட்டுவது கடினம் — இந்த ஓவன், ஏதேதோ பேசுகிறான், கூலி தாராளமாகக் கொடுக்க வேண்டுமாம், உற்பத்தி அப்போதுதான் பெருகுமாம்! வேலை நேரத்தைக் குறைக்க வேண்டுமாம்! அதனாலேயும், உற்பத்தி பெருகுமாம்! தொழிலாளர்களிடம் நல்ல பெயர் எடுக்கலாம் என்று இவ் விதமாகவெல்லாம் பேசி வந்தான்—பார்ப்போமே இப்போது இவனே ஆலை அமைத்துக் கொண்டான், சொன்னபடி செய்யட்டுமே" என்று பேசினர் முதலாளிகள். தங்களைப் போலவே ஓவனும் இலாப வேட்டை ஆடுவான் என்று எண்ணினர். ஆனால் ராபர்ட்ஓவன், அந்தஆலையை, தன் கருத்துகளை மெய்ப்பித்துக்காட்ட ஒரு வாய்ப்பாகக் கொள்கிறான், என்பதை அவர்கள் உணரவில்லை. ராபர்ட் ஓவனுடைய நோக்கம், பிற முதலாளிகளைவிட, இரக்கமனதும், தாராளத் தன்மையும் கொண்டவனாக நடந்து கொள்ளவேண்டும் என்பது மட்டுமல்ல — தொழிலாளர்களை நீதியாகவும் நேர்மையாகவும் நடத்தும் முறைதான், உண்மையில் தொழில் வளத்தை ஏற்படுத்தும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிலே திட்டமிட்டுக் காட்ட வேண்டும் என்பதாகும்.

கூலியை அதிகப்படுத்தினான், தொழிலாளர் மனம் குளிர்ந்தது; வேலை நேரத்தை, பத்து மணியாக்கினான், சோர்வு நீங்கி, தொழிலாளர் சுறுசுறுப்புடன் வேலை செய்தனர்; உற்பத்தி குறையவில்லை; இலாபம் கிட்டாமலும் போகவில்லை.

நியூலானர்க் ஆலை நிர்வாகத்திலே, ஓவன் புகுத்திய புதுமுறை, நாட்டிலேயே பரபரப்பை உண்டாக்கிற்று. மூடுவிழா விரைவிலே நடைபெறும் என்று எதிர்பார்த்தவர்கள் ஏமாந்தனர்; தொழிலாளர் உலகம் ஓவனைப் போற்றிடக் கண்டனர். ஓவன், ஆலையிலே இதனைச் செய்து காட்டியதுடன் நிற்கவில்லை; இந்த முறையைக் கையாளும்படி பிறருக்கும் எடுத்துக் கூறலானான்.

தொழிலாளர் பெறும் கூலியை, சந்தையில் சரக்கு விற்பவர்கள் சுரண்டிவிடவும் ஓவன் அனுமதிக்கவில்லை. தன் ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குத் தேவையான பண்டங்களை, அதிக இலாபம் வைக்காமல், நியாயமான விலைக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தான்—தொழிலாளரின் வாழ்க்கையில் சுகம் ஏற்பட, மருத்துவ விடுதிகள் அமைத்தான், அவர்களுக்கு அறிவு கிடைக்க, பள்ளிகள் ஏற்படுத்தினான் — நியூலானர்க், ஒரு சிறு இலட்சிய புரியாகக் காட்சி அளித்தது-கொடுமையும் மடைமையும் அற்ற இடமாக, முதலாளியின் மூர்க்கத் தனமும் தொழிலாளியின் எதிர்ப் புணர்ச்சியும் தலைகாட்டாத சமரச புரியாக, களிப்பூராக விளங்கிற்று. ஆறு வயது ஏழு வயதுச் சிறுவர்களை ஆலைகளிலே கசக்கிப் பிழிந்துவந்த அந்தக்காலத்தில், ஓவன் பத்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வேலை வாங்குவதில்லை, வேலை செய்யும் சிறுவர்களுக்கும், வேலை செய்யாத சிறுவர்களுக்கும் பள்ளிகள்! விளையாட்டு மைதானங்கள்!

தொழிலாளர்கள், முதலாளிக்கு இலாபம் தேடித் தரும் கருவிகள் அல்ல—இரு வகையினரும் கூடி, பொது நன்மைக்காகப் பாடுபடும் முறை, நியூலானர்க் தந்த பாடமாயிற்று.

அனைவரும் ராபர்ட் ஓவன்போலாகி விட்டால்! எண்ணும் போதே ஏழையர் உலகு இன்பம் பெற்றது! ஓவன், இந்த முறையைக் கையாண்டு மனிதத் தன்மையை நிலைநாட்டும்படி தொழிலதிபர்களைக் கேட்டுக் கொள்ளலானான்.

"இதோ நன்னெறி! பூசலும் பகையும் ஒழிந்துபட வழி! தொழிலும் வளரும், தோழமையும் மலரும்; இலாபமும் கிடைக்கும், அதேபோது சமூகமும் செழிப்புறும்—இதைத் தொழிலதிபர்கள் அறிந்து நடந்தால், நாடு பூங்காவாகும். தொழிலாளர்களைத் துயரத்தில் ஆழ்த்தினால்தான் இலாபம் கிடைக்கும் என்று எண்ணுவது மடைமை; இதோ என் ஆலையைப் பாருங்கள், பாடம்காணுங்கள்" என்று ஓவன் பிரசாரம் செய்யலானான்.

இது, முதலாளிகளுக்கு, கரும்பாகவா இருக்கும்! "இவன் ஒரு ஏமாளி, கிடைக்கும் இலாபத்தை, பள்ளிக்கூடம், மருத்துவவிடுதி என்றெல்லாம் பாழாக்கிவிடுகிறான். தொழிலாளர்களுக்கு அதிக தைரியம் தருகிறான் — அவர்கள் இனி எப்படி அடக்க ஒடுக்கமாக இருப்பார்கள்? இவன்போல நாமும் செய்தால் நாசமாகவேண்டியதுதான்! கனவு காண்கிறான், கனவு! உலகைத்திருத்தும் திட்டமாம்!" என்றெல்லாம் முதலாளிகள் பேசலாயினர்.

சொன்னால் புரியாது, செயலில் காட்டினால் ஏற்றுக்கொள்வார்கள், என்று ஓவன் நம்பினான்—தொழில் அதிபர்களின் மனப்பான்மையைச் சரியாக அறிந்துகொள்ளாமல்.

தொழிலாளர்களுக்குக் குறைவான கூலி கொடுப்பது, இலாபத்தை அதிகமாக்கிக் கொள்வதற்கு மட்டுமல்ல — தொழிலாளர்களுக்குக்கூலி, வாழ்க்கைச் செலவுக்குமேல் கிடைத்தால், முன்னேற்றம் ஏற்பட்டுவிடும், பிறகுதொழிலாளர்கள், தம்மைமதித்து நடக்கமாட்டார்கள் என்பது முதலாளிகளின் எண்ணம். உழைப்பின் பெருமையையும் பயனையும், அவர்கள் மிகவும் மட்டமாகக் கருதினார்கள்; தங்கள் திறமையும் இயந்திரமும், இலாபத்

துக்கு முக்கியமான காரணம் என்று வாதிட்டனர்.

உலகு திருந்தவேண்டும், அதற்குத் தொழிலுலகம் திருந்தவேண்டும் என்ற தத்துவத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஓவன், அவர்கள் சிந்தித்துப் பார்க்காததால், தொழிலாளர்களைக் கொடுமை செய்கிறார்கள், உண்மையை எடுத்துரைத்தால், எல்லோரும் நியூலானார்க் அமைத்துவிடுவார்கள், என்று எண்ணினர். பன்னிரண்டு ஆண்டுக்காலம், தன் முறையை அமுல் செய்துகாட்டினார்—மன்றாடிக் கூறிவந்தார் — பேசினார், எழுதினார், திரும்பத்திரும்ப, எனினும் எந்த முதலாளியும், பழைய முறையைக் கைவிட முன்வரவில்லை.

ஓவனுக்குக் கோபமும் வருத்தமும் பொங்கிற்று; செல்வவான்களிடம் இனிப் பேசிப் பயனில்லை; மக்களிடம் பேசவேண்டும்; அவர்கள் இந்தத் திட்டத்தை வரவேற்பர்—நாடெங்கும், நியூலானார்க்போல், அமைத்துக் கொள்வர்—கூட்டுறவு குதூகலமளிக்கும்; கொள்ளை இலாபக்காரர் கொட்டம் அடங்கும், என்று எண்ணினர்.

நாடாண்டவர்களிலே நண்பர்களாக இருந்தவர்களை நாடினார்—அவர்களும் ஓவன் சொல்வதை, சுவையுள்ள புதுவிஷயம், என்ற முறையிலே கேட்டுக்கொண்டனரே தவிர, நடைமுறைக்குக் கொண்டுவர இசையவில்லை; நடைமுறைக்கு ஏற்றது என்றும் கருதவில்லை.

தொழிலாளர் உலகு, புது எழுச்சி பெற்றது; நாம் வாழவேண்டிய முறையை, நம்மை நடத்தவேண்டிய முறையை, ஓவன் செய்துகாட்டுகிறார், அவருடைய இலட்சிய புரியிலே உள்ளவர்கள், இல்லாமைக்கு ஆளாகி வதையவில்லை, வேலைசெய்கிறார்கள், போதுமான ஓய்வு பெறுகிறார்கள். மனிதர்களாக வாழ்கிறார்கள்! அவர்களை நன்மக்களாக்கும் கல்வியும் தரப்படுகிறது; நமது உழைப்பால் கொழுக்கும் முதலாளிகள், மாளிகைகளிலே கொலுவிருந்துகொண்டு, மாமன்றத்தை மயக்கி, மாடுகளென நம்மை நடத்துகிறார்கள், நாம் ஏன் இதைச் சகித்துக்கொள்ளவேண்டும், எதிர்த்துப் பழைய முறையை ஒழிப்போம்—புது வாழ்வுக்காகப் போரிடுவோம்—என்று பேசலாயினர்; தொழிலாளர் உலகம் வீறுகொண்டு எழலாயிற்று.

துரைத்தனமோ, தொழிலதிபர்களுக்குத் துணை நின்றது. தொழிலாளர்களின் மனப்போக்கு கண்டு கிலிகொண்டது, அடக்கு முறையை அவிழ்த்துவிட்டது.

தொழிலாளர்கள், கூடிக்கலந்து பேசி, முறை வகுத்து, திட்டப்படி போராட, சங்கம் தேவைப்பட்டது; ஆனால் தொழிலாளர் கழகம் அமைக்கப்படுவதை, பயங்கரமான நடவடிக்கையாக முதலாளிகள் கருதினர்—துரைத்தனமும் கருதிற்று.

தொழிலாளர்கள் ஒன்றுகூடிப் பேசுவதையே, துரைத்தனம், நெடுங்காலமாகவே விரும்பவில்லை. ஒன்றுகூடினால், ஒருவருக்கொருவர், குறைகளைப் பற்றிப் பேசிக்கொள்வர், எதிர்ப்பு உணர்ச்சி கிளம்பும், என்று சர்க்கார் எண்ணிற்று.

"பேராபத்து! பேராபத்து" என்று, பதறிக் கூறினர், பாதிரியார், நாட்டின் பாதுகாவலர் பதவியிலிருந்த கிராம்வெல்லிடம். என்ன ஆபத்து?

"செருப்புத் தைக்கும் தொழிலாளர்கள் இருபத்தொருவர், ஊருக்கு வெளியே உள்ள குன்றின் மீது கூடியிருக்கிறார்கள்; ஊரிலிருந்து மற்ற செருப்புத் தைப்பவர்களை எல்லாம் அழைத்திருக்கிறார்கள்; கூலியை உயர்த்திக் கேட்கவேண்டும், தர மறுத்தால் யாரும் செருப்பு தைக்கக் கூடாது, சத்தியம் செய்து தரவேண்டும், மீறி நடப்பவனுடைய கைகாலை உடைத்துவிடுவோம், என்று மிரட்டி, அந்த 21 பேர், தொழிலாளர்களைத் தூண்டுகிறார்கள்.'' பேராபத்து! என்றாராம் பாதிரியார். இது 1538ம் ஆண்டில்! இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகும், இதே மனப்பான்மைதான் நிலவி வந்தது. தொழிலாளர்களை ஒன்றுகூட விடுவது பேராபத்து என்று கருதப்பட்டது; ஒன்றுகூடினால் கிளர்ச்சிக்குத் திட்டம் வகுத்துவிடுவார்கள் என்ற கிலி! இதன் காரணமாகத் தொடுக்கப்பட்ட வழக்குகளும், விதிக்கப்பட்ட தண்டனைகளும் அக்ரமமானவை!

பொருளாதார தத்துவ விளக்க ஏடு எழுதிய ஆடம்சிமித் என்பவர், தொழிலாளர்கள் ஒன்றுகூடுவதை, தீது பயப்பது என்றே கருதினர்.

"பொழுதுபோக்குக்காகவோ வேடிக்கைக்காகவோ கூடினாலும், தொழிலாளர்கள், மக்களுக்கு விரோதமான சதிப் பேச்சுப் பேச ஆரம்பித்து, அதிகக் கூலி பெறுவதற்கான கிளர்ச்சியைத் துவக்கிவிடுவார்கள்!" என்று ஆடம்சிமித் கூறினர். அவ்வளவு அவநம்பிக்கை இருந்தது தொழிலாளர்கள் ஒன்று கூடுவதுபற்றி.

எனினும் பல்வேறு துறைகளிலே இருந்துவந்த தொழிலாளர்கள், பொழுது போக்காகவும், உதவி வழங்கிக் கொள்ளவும் சங்கம் அமைத்துக் கொண்டு வந்தனர். வேலை இழந்தவர்களுக்கு உதவி தருவது, வேலை கிடைக்காது திண்டாடுபவருக்கு வேலை கிடைக்க வழி செய்வது போன்றவைகளுக்காகக் கூடிப்பேசினர். கிழமைக்கொரு தடவை கூடுவது — தத்தமது தொழிலகத்துச் செய்திகள் பற்றிப் பேசுவது—ஒரு பொது உண்டிப் பெட்டியில் ஆளுக்கு இரண்டு பென்சு மூன்று பென்சு பணம் போடுவது, இது முறையாக இருந்து வந்தது. இதனையும் முதலாளிகளும் சர்க்காரும் சந்தேகக் கண்கொண்டே பார்த்து வந்தது. ஏனெனில், ஒன்றுகூடிப் பேசும் தொழிலாளர்களிடம் படிப்படியாக ஒற்றுமை ஏற்பட்டுவிடும், தங்கள் தொல்லை நிரம்பிய வாழ்க்கையைச் செம்மைப் படுத்திக்கொள்ள என்ன வழி என்று யோசிக்கத் தொடங்குவார்கள், பிறகு, கூலி உயர்த்தவேண்டும், வேலை நிறுத்தம் செய்வோம் என்று குரல் எழுப்புவார்கள், எனவே ஆபத்து ஏற்படும், தொழிலுக்கு, நாட்டுக்கு, என்று வாதிட்டனர்.

வேலை செய்யட்டும்—ஓய்வு கிடைக்கும்போது கர்த்தரின் புகழ் பாடட்டும், அதற்காகத்தானே தேவாலயம் இருக்கிறது! இதை விட்டுவிட்டு ஒன்றுகூடிப் பேசுவானேன்? என்று என்று கேட்டனர்.

தொழிலாளர்கள் ஒன்று கூடினால் குகைக்குள் இருந்து புலி வெளிக்கிளம்புவதுபோல, அவர்கள் மனதிலிருக்கும் பகை உணர்ச்சி வெளிக்கிளம்பும் என்று தொழிலதிபர்கள் எண்ணினர்; துரைத்தனமும் கருதிற்று. எனவே நெடுங்காலம்வரையில், இந்த உரிமை மறுக்கப்பட்டது; மீறிக் கூடிடுவோர் மீது அடக்குமுறை வீசப்பட்டது.

இந்தக் குரோத நிலையைக் கண்டு ராபர்ட் ஓவன் வருத்தப்பட்டார்—ஏன் பகையை வளர்த்துக்கொள்ளவேண்டும்—நியூலானார்க்போல், தொழிலிடங்கள் யாவும் தோழமைக் கூடங்களாக்கப்படலாமே, வழி எளிதாக இருக்கும்போது, ஏன் வீணை பகையை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டார். அவர் மனதிலே இருந்தது போலவே நல்லெண்ணமும், மக்களின் உழைப்பிலே இருந்துவந்த மதிப்பும் எல்லாத் தொழிலதிபர்களுக்கும் இருக்கும் என்று எண்ணினர். தூசி துடைத்துவிட்டால் ஒளிவிடும் கண்ணாடிபோன்றது முதலாளிகளின் மனம் என்று கருதினர். மக்களை மாக்களாக்கித்தான், தமது வாழ்வை வளமாக்கிக்கொள்ளமுடியும், துள்ளிவிளையாடும் புள்ளிமானைக்கொன்று தின்றுதான் புலிவாழ இயலும், என்று முதலாளிகள் கூறவில்லை, ஆனால் அது தான் அவர்கள் எண்ணம்.

நியூலானார்க் தொழிலகத்தைக் காண வருபவர்களெல்லாம், களிப்புற்றுப் பாராட்டுகிறார்கள் — இப்படித்தான் இருக்கவேண்டும் என்று புகழ்ந்துரைக்கிறார்கள்—தத்துவம் பேசுபவர்கள் வருகிறார்கள், இங்கு மனிதகுலத்துக்கே புதுப்பாடம் கிடைக்கிறது என்று கூறுகிறார்கள், அரசர்கள் வருகிறார்கள், அமைதியும் நிம்மதியும் உலவும் இடத்தைக்கண்டு ஓவனுடைய திறமையைப் பாராட்டுகிறார்கள்! எனவே ஓவன், இவ்வளவு தெளிவாக

உண்மை தெரியும்போது ஏன் மற்றவர்கள் பகைகக்கும் முறையை மாற்றி அமைக்கலாகாது, என்று கேட்டார். அந்தக் கேள்வி! தொழிலுலகை ஆளும் பணந்திரட்டிகளுக்குப் பயமூட்டிவிட்டது, ராபர்ட் ஓவன், வீண் கிளர்ச்சிக்காரன், கனவு காண்கிறான், தொழிலாளர்களை ஏவிவிடுகிறான், அமைதியைக் குலைக்கிறான் என்று எதிர்த்துரைக்கலாயினர்.

ஓவனுக்குப் புதியதோர் உண்மை புலப்பட்டது — முதலாளிகள் மனம் மாறமாட்டார்கள் — முறையை மாற்றிக்கொள்ளமாட்டார்கள்— அவர்களிடம் பேசுவது வீண்வேலை — மக்கள் விழிப்புறவேண்டும், இனி அந்தத் துறையிலேதான் பாடுபடவேண்டும் என்ற உண்மை புலப்பட்டது. நாடு முழுவதும் சுற்றி, புதிய முறைபற்றிப் பேசிவரலானான்.

தொழிலிடங்களிலே புதுமுறை எங்ஙனம் வகுப்பது என்பது மட்டுமல்ல, சமூக அமைப்பிலே புதுமை எப்படிக் காண்பது, என்று விரிந்தது, ஓவனுடைய அறிவுரை.

தொழிலாளரின் வாழ்விலே உள்ள துயர் துடைப்பது எங்ஙனம் என்பதிலே துவங்கிய பேச்சு, மனித குலத்தின் குறைபாட்டினைக் களைவது எங்ஙனம் என்ற அளவுக்குச் சென்றது.

பொறிகள் நாலாபக்கமும் பறந்தன. ஏன் மனிதரில் சிலர், கெட்டகுணம் படைத்தவர்களாக இருக்கிறார்கள்?

சோம்பித் திரிகிறான், ஏன்? சொன்ன சொல் தவறுகிறான், எதனால்? களவாடுகிறான், ஏன்? சூது, பொய் போன்ற தீய குணம் இருக்கிறது, ஏன்?

அவனவன் புத்திக்கு ஏற்றபடி குணம் அமைகிறது! என்றனர், பழைமை விரும்பிகள் — அவன் பாபி, எனவேதான் பாபச் செயல் புரிகிறான் என்றார் பாதிரி; அவன் கெட்டவன், எனவே தண்டிக்கப்படவேண்டியவன் என்றது, துரைத்தனம்; அவனோ ஏன் என்று எனக்கே தெரியவில்லை என்றான்.

ஓவன், "அவன் கெட்டவனாக இருக்கிறான், என்று கூறுகிறீர்கள், அவனை நாம் கெட்டவனாக்கிவிடுகிறோம், சமூக அமைப்புத்தான் அவனை இந்த நிலையில் வைத்திருக்கிறது. மனிதனுடைய குணம், அவனாக ஏற்படுத்திக்கொள்வதல்ல, அவனுக்காகச் சமூகம் ஏற்படுத்திக் கொடுக்கிறது. எனவே, அவனைக் கெட்டவனாக்குவதும், நல்லவனாக்குவதும் நம்மிடம் இருக்கிறது; நாம் சமூக அமைப்பைச் செம்மையுடையதாக்கினால், மனிதன் நல்ல பண்புள்ளவனாவான்" என்று கூறினார்.

சோம்பேறி, கெட்டவன், சூதுக்காரன், கள்ளன், போக்கிரி—என்று வசைமொழிகூறி, மனிதனை அடக்கு வதைத்தான், சமூகப் பெரியவர்கள் முறையாகக் கொண்டிருந்தனர். இந்தத் தீய குணங்களைக் களைந்து கொள்ள, பிரார்த்தனை வழி என்று காட்டப்பட்டது. ஆனால் ஓவன் சமூகத்திலே ஏற்படுத்தப்படும் சுற்றுச் சார்புதான் வழி என்றுரைத்தார்.

மற்றவர்கள், ஏழையை ஏசினர், ஓவன், அவனை அந்தக்கதிக்கு ஆளாக்கிய சமூகத் தலைவர்களைக் கண்டித்தார்.

மனிதனுடைய பண்பு வளரவேண்டுமானால், அவனுக்கு அதற்கான அறிவு தரவேண்டும், அறிவை அவன் பெறுவதற்கான வாழ்க்கை நிலையும் அவனுக்கு அளிக்கப்படவேண்டும், என்று ஓவன் வாதிட்டார்.

சேற்றிலே இறங்கிச் செந்தாமரையைப் பறித்து வந்து மாளிகையிலே தருகிற கூலியிடம், செந்தாமரையின் அழகா தெரியும், சேற்றின் நாற்றம் தானே அடிக்கும்! அவனைச்சேற்றிலே இறங்கச் செய்து, அவன் பறித்து வந்த செந்தாமரையைக் கண்டு மகிழ்வதுடன், அவன் நாற்றம் பிடித்தவன் என்று அவனை ஏசுவதும், விரட்டி அடிப்பதும் நடைபெறுகிறது! ஓவன் இதை வன்மையாகக் கண்டிக்கலானார்.

பண்பு பெற, அறிவு வேண்டும், அந்த அறிவை அளிக்கும் பொறுப்பை ஆள்வோர் எடுத்துக்கொள்ளவேண்டும், அந்த அறிவு அவனுக்குப் பயன் தரும் விதமான தொழிலை அவனுக்காக அமைத்துத் தரவேண்டும்— என்று ஓவன் கூறினார்.

சுற்றுச்சார்பு, மனிதனை உருவாக்கும் வலிவுடையது என்பதையும், அந்தச் சுற்றுச்சார்பை, பணந்தேடுவோரும் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் ஆட்சியாளரும், ஏழைக்குக் கேடு தரும் முறையிலேயே அமைத்து விடுகிறார்கள் என்பதையும், ஓவன் எடுத்துக் காட்டினார்.

ஏழையை, மற்றவர்கள் கண்டித்தனர்—புத்தி கூறினர்! ஓவன், ஏழையின் 'கெட்ட நிலைக்கு'க் காரணமாக இருக்கும் 'குற்றவாளி'யைச் சுட்டிக் காட்டினார்.

ஏழை அவனுக்கு உள்ள கெட்ட குணத்தால், சமூகத்துக்குக் கேடு செய்யாவண்ணம், 'போலீஸ்' வேலை செய்வதை, முக்கியமான பொறுப்பாக ஆட்சியாளர் கொண்டனர். ஓவன், ஏழையிடம், யார் உண்மையான குற்றவாளி என்று எடுத்துக் கூறினார்— குற்றவாளிகளைத் தண்டிக்கக் கிளம்புவீர் என்று பரணிபாடிடவில்லை, நீங்கள் இயல்பாகவே கெட்டவர்கள் என்பதல்ல, உங்களை இந்த நிலையில் வைத்திருக்கிறார்கள், உங்களுக்குள் ஒற்றுமையும் கட்டுப்பாடும், எழுச்சியும் ஏற்பட்டால் முன்னேற்றம் நிச்சயம் ஏற்படும், என்று கூறினார். தொழிலாளர் உலகிலே புதியதோர் நம்பிக்கை பிறந்தது.

"பண்பு வளரவேண்டும் என்கிறீர்கள்! கெட்ட குணம் மேலோங்கி இருக்கிறதே, என்று ஏசுகிறீர்கள்! பண்பு எப்படி வளரும்? ஏழு வயதுச் சிறுவனை ஆலையிலே அடைத்து கசக்கிப் பிழிகிறீர்கள், உங்கள் இலாபத்தைப் பெருக்கிக்கொள்ள; அந்தச் சிறுவன், பெரியவனாகிறான்—உடலிலும் உள்ளத்திலும் ஆலை தந்த தழும்பு இருக்குமே தவிர, அறிவு தரும் பண்பா இருக்கும்! எங்கே அவனைப் பண்புள்ளவனாக விடுகிறீர்கள். செய்யும் தொழிலுக்கு ஏற்ற மனநிலையும், தொழில் செய்வதால் கிடைக்கும் வசதியின் அளவுக்குத் தகுந்த குணமும்தானே, மனிதன் பெறமுடியும். குணம், என்ன அவன் மனதிலே தானாக மலருமா! அவன் பெறுகிறான் குணத்தை, நீங்கள் அளித்திருக்கும் முறையில்! மல்லிகைத் தோட்டத்திலே உலவச் சொன்னால்தானே மணம் பெறுவான், கள்ளிக் காட்டிலே உலவவிட்டு வைத்து, அவனுக்கு, மலர் மணம் அனுபவிக்கும் பண்பே இல்லை என்று ஏசுவதா—

ஓவன், சமூகத்தைக் கெடுத்திடும் கயமையைக் கண்டிக்கலானார்.

முதலில் சுற்றுச் சார்பைச் சரிப்படுத்தவேண்டும் — இரண்டாவதாக அறிவு தரும் கல்வி தரவேண்டும். இந்த இரண்டு 'வாய்ப்பும்' கிடைத்து விட்டால், ஏழைக்கு யாரும் உபதேசம் செய்துகொண்டும் இருக்கத் தேவை இல்லை, அடக்கிக்கொண்டுமிருக்கத் தேவையில்லை. உழைக்கிறோம், கொழுக்கிறார்கள்! — என்று அவன் மனம் எண்ணும் விதமாகத் தொழில் உலக முறை இருக்குமட்டும், அவன் 'பகை'வனாகத்தான் இருப்பான்! பண்பு இன்றிப் பகைத்துக்கொள்கிறானே, என்று பசப்பிப் பயன் என்ன? அவனை அந்தக்'கதி'க்குக் கொண்டுவந்த குற்றவாளிகளா, அவனைத் தண்டிக்கும் நியாயாதிபதிகளாகவும் வேடம் போட்டுக்கொள்வது.

"சமூக அமைப்பு — புதியகருத்து" என்ற ஏடுதீட்டினார் ஓவன், அதிலே இதுபோன்ற எண்ணங்களைத் தெளிவாக்கிக் காட்டினார். ஒரு ஆலையிலே மட்டுமல்ல, சமூகம், முழுவதும், புதுக் கருத்துப் பொலிவு தரவேண்டும், என்று பேசினார், எழுதினார், ஓயாமல், ஆர்வத்துடன்.

(தொடரும்)

# "பறைஜாதித் தமிழர்"

கடந்த வாரம் கண்டி முற்ற வெளியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலே ஒரு பௌத்த பிட்சு பேசியதாகத் தினப்பத்திரிக்கைகளில் வெளியான வாசகங்களைப் படிக்கும் எந்தத் தமிழ் மகனும், அவன் இந்துவாய் இருந்தாலும் சரி, கிறிஸ்தவன் அல்லது இஸ்லாமியனாய் இருந்தாலும் சரி, நிச்சயம் ஆத்திரமும் அவமானமும் அடைவான் என்பதில் சந்தேகமில்லை.

பிற உயிர்களுக்கு மனம், வாக்கு, காயம் ஆகிய எந்தக் கரணத்தினாலும் இம்மியும் இன்னல் விளைக்கக்கூடாது என்று போதித்தருளிய சாந்த மூர்த்தியான கௌதம புத்தரின் அடியார்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் இந்த பௌத்த பிட்சுகள், மொழி வெறியினால் உந்தப்பட்டு பித்தர்களாகிப் பிதற்றும் தகாத மொழிகள் பஞ்சசீலம் படைத்த பௌத்த மதத்திற்கும், புத்த பகவானின் புனிதக் கொள்கைகளுக்கும் இழிவையன்றிப் பெருமையைத் தேடித்தரா.

மேற்படி பொதுக்கூட்டத்தில் சிலவன்சதேரோ என்ற பௌத்த சந்நியாசி பேசியதாக தினப் பத்திரிகைகளில் வெளிவந்த வாக்கியங்கள் பின்வருமாறு:

"சிங்கள இனந்தான் இந்த உலகத்திலேயே மிக உன்னதமான இனம். இந்த இனத்தின் மொழி, கலாச்சாரம் ஆகியவற்றை நாம் இழந்துவிடுவதா? எங்கள் சமுதாயத்தையே தமிழர்கள் அழித்துவிடப் போகிறார்கள்.

"இன்று நாங்கள் எமது வீரன் துட்டகைமுனு மன்னனுக்கு நன்றியும் வணக்கமும் செலுத்த வேண்டும். தமிழர்களை விரட்டி சிங்கள மக்களுக்கு விடுதலையளித்த வீரன் துட்டகைமுனு."

"இளைஞர்கள், முதியவர்கள், குழந்தைகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து எமது மொழியையும், கலாச்சாரத்தையும் காப்பாற்ற முன்வாருங்கள். இதற்காக எங்கள் உயிர்களையே கொடுப்போம். இந்தப் புனித கைங்கரியத்திதிற்காக நாடு முழுவதுமே இரத்தம் ஆறாகப் பெருகி ஓடட்டும்.

"சிங்களப் பகுதிகளில் சிங்களமும் தமிழ்ப் பகுதிகளில் தமிழும் ஆட்சிமொழியாக இருக்கலாம் என்று சிலர் கூறுகிறார்கள். எங்களுக்கு இது தேவையில்லை. இந்த நாடு முழுவதற்கும் சிங்களமே ராஜாங்கமொழியாக இருக்கவேண்டும்."

"நாலுகோடித் தமிழர்களைக் கொல்லும் பாபம் ஒரு சிங்களவனைக் கொலைசெய்யும் பாபத்திற்குக்கூட ஈடாகாது. பறைஜாதித் தமிழர்களுக்கு இடங்கொடுத்தால் எமது சமுதாயம் இடந்தெரியாமல் அழிந்துபோகும்."

காமம், வெகுளி, கொலை முதலிய கொடிய குணங்களை அடக்கிக் காஷாயம் தரித்த ஒரு சந்நியாசியின் வாயில் இருந்து வரக்கூடிய வார்த்தைகளா இவை? உன்னதமான பௌத்த கொள்கைகளையும் புனிதமான பாலி மந்திரங்களையும் உச்சரிப்பதற்கு இவருடைய நாக்கு உண்மையில் தகுதியுடையதுதானா?

மொழிவெறி தலைக்கேறி தலைகால் தெரியாது உளறும் இந்த பௌத்த பிட்சுக்களுக்கு சரியான சாட்டை கொடுத்திருக்கிறார் திருகோணமலைப் பிரதிநிதியும் தமிழரசு கட்சிப் பிரமுகருமான திரு. என். ஆர். இராஜவரோதயம். பத்திரிகைகளுக்கு அவர் விடுத்துள்ள ஒரு செய்தியில், "புத்த ஜயந்தியைக் கொண்டாடுவதற்கு வெகு மும்முரமாக பௌத்த உலகம் தயார் செய்துவரும் இந்தச்சமயத்தில் நமதுநாட்டிலுள்ள பௌத்த பிட்சுக்கள் விரோதத்தையும், பகைமையும் வளர்க்கும் செயல்களில் ஈடுபட்டிருப்பது இதயத்தை வருத்துகிறது" என்று கூறும் அவர் பாஷைப் பித்தர்களுக்கு ஒரு எச்சரிக்கையும் செய்திருக்கிறார்.

"ஒவ்வொரு சிங்கள மகனும் ஒரு துட்டகைமுனு என்று நம்பிக்கை யூட்டப்படுகிறான். இந்த துட்டகைமுனுக்கள் தமிழ்ப் பேசும் சமூகத்திலுள்ள சக்தியும் வீரமும் நிறைந்த எல்லாளர்களுடன் போர் புரிந்து முடிவை அடையும் தினம் இந்த நாட்டிற்கு மிகவும் துக்ககரமான தினமாகும்"

என்பதே அவருடைய எச்சரிக்கையாகும்.

சிங்கள மக்கள், தங்கள் மொழிக்கும், கலை, கலாச்சாரங்களுக்கும் உரிமை கோருவதை நாம் கண்டிக்கவில்லை. தமிழர்களைப்போல் உறங்கிக் கிடக்காமல் தங்கள் மொழியை அரசோச்சச் செய்வதற்கு, அரியணையில் அமர்த்துவதற்கு அவர்கள் செய்யும் ஆர்ப்பாட்டங்களை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஒரு சமூகம், ஒரு இனம் தனது உரிமையைக் கோருவது தவறாகாது. ஆனால் அதற்காக வேண்டி இன்னொரு இனத்தை, இன்னொரு சமூகத்தை 'பறைஜாதி' என்பது போன்ற பதப் பிரயோகங்களினால் தூஷிப்பது அடுக்காது. இத்தகைய வகுப்புத் தூஷணைகள் பொது மேடைகளில் சிந்தப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். இதை அரசாங்கத்தினர், வேரிலேயே கிள்ளியெறிந்து கட்டுப்படுத்தத் தவறினால், அவர்களே வகுப்புக் கலவரங்கள் போன்ற சமூக உற்பாதங்களுக்கு வித்திட்டவர்கள் ஆவார்கள். அதன் விளைவு பாரதூரமானதாயிருக்கும் என்பதை நாம் அரசாங்கத்திற்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

—சுதந்திரன்.


வெளிவந்துவிட்டது

## திராவிடர் நாட் குறிப்பு
## (டயரி) 1956

இந்த டயரியில், தி. மு. க. முழு விவரங்கள், சட்ட திட்டங்கள், பேச்சாளர் முகவரிகள், 1100 தி. மு. க. கிளைகளின் பட்டியல், அஞ்சல், பத்திரப் பதிவு கட்டணங்கள், விற்பனை வரி வருமான வரி விவரங்கள் உள்ளன.

பக்கந்தோறும் உலக அறிஞர்களின் புதிய பொன்மொழிகள்.

அழகிய முழு கலிகோ பைண்டு. 500 பக்கங்கள்; விலை ரூ. 1. செலவு தனி. விற்பனையாளர் கழிவு 20%. ஒரு டயரி வேண்டுவோர் ரூ. 1-3-0 அனுப்புக.

குறிப்பு:— தி. மு. க. தலைவர்களின் பெரிய படங்கள், பொங்கல் வாழ்த்துகள் கிடைக்கும்.

போர்வாள்,
147, பவழக்காரத் தெரு, சென்னை

# கவியின் காலமும் கருத்தும்

ஒரு கையால் தலைமயிரையும், ஒரு கையால் இடுப்பையும் பிடித்துச் சீதையை இராவணன் தூக்கிக்கொண்டுபோனான்.

பூமியைப் பெயர்த்து அந்துடன் சீதையை தூக்கிக்கொண்டுபோனான்.

இராவணனால் தூக்கிச் செல்லப்பட்ட சீதை உண்மைச் சீதையல்ல— மாயா சீதை.

இப்படியாக இராவணன் சீதையைத் தூக்கிச் சென்ற முறை பற்றிய விளக்கங்களை முறையே வால்மீகியும், கம்பரும், துளசிதாசரும் தந்துள்ளனர். இவற்றில் எது சரி, எது தவறு என்ற ஆராய்ச்சியில் இறங்கிய அன்பர் ஆச்சாரியார், வால்மீகியின்விளக்கத்தையே, அதாவது, ஒரு கையால் தலைமயிரையும் இன்னொரு கையால் இடுப்பையும்பிடித்துத் தூக்கிக்கொண்டு போனான் என்ற விளக்கத்தையே உண்மையானதும் சரியானதும் என்ற முடிவோடு அவரும் ஒரு இராமாயணம் எழுதியிருக்கிறார்.

வால்மீகியும், கம்பரும், துளசிதாசரும் எழுதியது போதாதென்றோ அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ ஆச்சாரியாரும் ஒரு இராமாயணத்தை எழுதியுள்ளார். அரசியலில் இடம் கிடைக்காதுபோகவே, ஏதாவதொரு ஆசிரமக் கதையையாவது எழுதித் தொலைப்போமே, எஞ்சியிருக்கும் கொஞ்சக் காலத்தையும் ஏன் வீணாக்க வேண்டும் என்று கொண்ட முடிவின் பயனாக இராமாயணம் எழுதினார் என்றே வைத்துக்கொள்வோம். எப்படியோ ஒன்று, இராமாயணத்தில் வரும் நிகழ்ச்சிகள்பலவற்றுள்முக்கியமான ஒரு நிகழ்ச்சி சீதையைஇராவணன் தூக்கிச் சென்றதுதான் என்பதை விளக்குவதே மிகமிக இன்றியமையாததென்றமுறையில்தான் வால்மீகி முதல் ஆச்சாரியார் வரை எல்லோரும் தங்கள் தங்கள் திறமையைப் பயன்படுத்தியுள்ளனர்.

சீதையை இராவணன் தூக்கிக் கொண்டுபோன முறைகளில் வால்மீகியின் முறையையே அன்பர் ஆச்சாரியாரும் கடைப்பிடித்திருக்கிறார். இது உண்மையிலேயே வரவேற்கக் கூடியதுதான், ஆனால் அதில் ஒரு திருத்தம் கூறியிருப்பதுதான் சிந்தனைக்குரியதாக இருக்கிறது.

ஒரு கையால் கூந்தலைப் பிடித்து ஒரு கையால் இடுப்பை பிடித்துச் சீதையை இராவணன் தூக்கிக் கொண்டுபோனான் என்று வால்மீகி ஏன் எழுதினார் தெரியுமா? இராவணன் ஒரு துஷ்டன், எனவே துஷ்டத்தனமாக, நடந்து கொண்டான் என்பதை விளக்கிக் காட்டவே வால்மீகி இவ்விதம் எழுதினார் என்று தெளிவுரை தருகிறார் ஆச்சாரியார். எப்படியாவது இராவணனைக் கெட்டவனாக்கிக் காட்டவேண்டுமென்பதில் அக்கரைகொண்டவரல்லவா ஆச்சாரியார். எனவேதான் வால்மீகியின் முறையை இவரும் கையாண்டு அதற்கொரு புது விளக்கமும் தந்திருக்கிறார். போகட்டும்—பாவம், எதெதிலெல்லாமோ தோல்வி கண்ட ஆச்சாரியார் இதிலாவது தாம் வெற்றி கண்டுவிட்டதாக நினைத்துக் கொள்ளட்டும். ஆனால், ஒரு உண்மையை மறைத்துப் புனைந்துரை கூறுவது அவ்வளவு புத்திசாலித்தனமாகாதென்பதைமட்டும் இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியவில்லை.

அண்மையில் சென்னையில் நடைபெற இருக்கும் கம்பர் விழாவைத் துவக்கிவைக்கும் பணியை மேற்கொண்ட ஆச்சாரியார் இராமாயணத்தைப்பற்றி ஒரு அலசு அலசி இந்த 'உண்மையை' உதிர்த்திருக்கிறார். அதோடு இன்னொரு விளக்கமும் தந்திருக்கிறார்.

> "காலத்திற்குத் தகுந்ததுபோல் மக்கள் கருத்திற்கேற்ப விஷயங்களை ஓரளவு மாற்றுவதே கவியின் சக்தி"

இது, இராமாயணம், வால்மீகியின் காலத்திலிருந்து ஆச்சாரியாரின் காலம் வரையில் மாற்றி மாற்றி ஏன் எழுதப்பட்டதென்பதற்கு ஆச்சாரியார் தரும் தெளிவுரையாகும். காலத்தின் போக்கையும் மக்களின் கருத்தையும் அறிந்து அதற்கேற்பக் கவி ஒரு பொருளை மாற்றிக் கூறுவதுதான், அந்தக் கவியின் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு என்பது ஆச்சாரியாரின் வாதமாகும். இதனை யாரும் வரவேற்க மாட்டார்கள். காலத்தின் போக்கையும்மக்களின்கருத்தையும் அறியாதவன் ஒரு கவியல்ல என்பதை நாமும் ஒப்புக்கொள்கிறோம். ஆனால், இராமாயணத்தைப் பொறுத்தவரையில் ஆச்சாரியாரின் இந்த வாதம் சரியா என்று நாம் சந்தேகிக்காவிட்டாலும், இராம பக்தர்கள் அவசியம் சந்தேகிப்பார்கள். அவர்கள் சந்தேகிப்பது மட்டுமல்ல, சஞ்சலமும் கொள்வார்கள். தெய்வமாக் காதையாம் இராமாயணத்தை—காலத்தையும் கருத்தையும் கடந்து நிற்கும் ஒரு கடவுட் காதையைக் காலப் போக்கிற்கும் மக்கள் கருத்திற்கும் ஏற்ப மாற்றிக் கூறுவதா? அடுக்குமா இது என்று ஆத்திரப்பட்டு ஆர்ப்பரிப்பார்கள் என்பது ஒரு புறமிருக்க, இப்படியே இராமாயணத்தை அவரவர்கள் விருப்பப்படி மாற்றிக்கொண்டே போனால், கடைசியில் அதில் உள்ள சம்பவங்களில் எதுதான் எஞ்சி நிற்கும் என்ற இரங்கத்தக்க நிலையும் இராம பக்தர்களுக்கு உண்டாகி விடுமளவுக்கு நிலைமை மாறிவிடும் போலன்றோ இருக்கிறது. ஆனால், வால்மீகியைக் கம்பர் மாற்றிய போதோ, கம்பரைத் துளசிதாசர் மாற்றியபோதோ எந்த இராம பக்தர்களும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே இராமாயணத்தில் உள்ள சம்பவங்களில் எதை யார் எப்படி மாற்றினாலும் எங்களுக்குக் கவலையில்லை என்ற போக்கில் இராம பக்தர்கள் இருக்கும் வரையில் இராமாயணத்தை யார் எப்படி வேண்டுமானாலும் மாற்றலாம். ஆனால் இப்படி மாற்றும் உரிமை இராம பக்தர்களுக்கு மட்டுமே உண்டு என்று ஒரு திருத்தம் மட்டும் இருந்துவிட்டால் போதும், கதையை எப்படிவேண்டுமானாலும் மாற்றிக்கொண்டே போகலாம்—கேட்பாரில்லை.

"இராமன் கானகம்சென்றபோது இலட்சுமணனும் கூடச் சென்றானே! ஏன் தெரியுமா? அண்ணனிடத்தில் அன்புகொண்டா? இல்லை; இல்லை! சீதாப்பிராட்டியாரிடம் இலட்சுமணனுக்கு அளவு கடந்த அன்பு. சீதையைப் பார்க்காமல் இலட்சுமணனால் ஒரு விநாடி கூட இருக்க முடியாது; எனவேதான் இராமனுடன் இலட்சுமணனும் காட்டுக்குச் சென்றான்" என்று கூறினால் கூட இராம பக்தர்கள் கலங்கமாட்டார்கள்—சந்தேகப்படமாட்டார்

கள்—ஆச்சாரியாரைப் போன்ற சிலருக்குச் சிறிதளவு சந்தேகம் ஏற்பட்டாலும், உடனே அதற்கு ஒரு புது விளக்கம், இராவணன் துஷ்டன், எனவே துஷ்ட காரியத்தைச் செய்தான் என்று விளக்கம் கூறியதைப்போல இதற்கும் கூறி உண்மையை மறைத்து விட்டதாக மனப்பால் குடித்து மகிழ்வார்கள் — பிறருக்கும் அதனைக் கூறிப் பெருமிதம் கொள்வார்கள்.

*

காலத்திற்குத் தகுந்ததுபோல் மக்கள் கருததிற்கேற்ப விஷயங்களை மாற்றுவதில் தான், ஒரு கவியின் சக்தி அடங்கியிருக்கிறது என்று ஆச்சாரியார் கூறுவதை யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். விஷயத்தை மாற்றிக் கூறுவது, அப்படிக் கூறுபவனுடைய திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டென்று ஆச்சாரியார் கருதுகிறார் போலும்! பாவம், அந்தத் துறையிலே பழக்கப் பட்டவர் அவர், அரசியல் வாழ்விலே அவருக்கு ஏற்பட்ட அல்லது ஏற்படுத்திக் கொண்ட அந்தப் பழக்கம் ஆசிரம வாழ்வை மேற்கொண்ட பிறகும், அவரை விட்டபாடில்லை. எனவே தான் விஷயத்தை மாற்றிக் கூறுவதில், விவேகம் இருப்பதாக வாதாடுகிறார்.

விஷயத்தை மாற்றிக் கூறுவதில், அதாவது, ஒரு காலத்தில் நடந்த ஒருசம்பவத்தை இன்னொரு காலத்தில் மாற்றிக் கூறுவதில் தான் ஒரு கவியின் திறமை இருக்கிறதென்றால், அந்தச் சம்பவம் உண்மையாக நடந்த சம்பவமா என்றகேள்வி பிறக்கிறது. உண்மையான சம்பவம் என்றால், அதனை மாற்றிக் கூறுவது மாபெருங் குற்றமாகும்.

அந்தக்காலத்தில் சாக்கிரட்டீசை நஞ்சு கொடுத்துக் கொன்றார்கள்; கலீலியோவைக் கல்லால் அடித்தார்கள்; ப்ரூனோவை உயிரோடு கொளுத்தினார்கள் என்ற வரலாற்று உண்மைகளை யாராவது இப்போது மாற்றிக் கூறினால் ஒப்புக் கொள்வார்களா? மாறாக, வரலாறுகளைச் சரியாகப் படியாததால் வாய்க்கு வந்தபடியெல்லாம் உளறுகிறான் என்றுதானே கூறுவார்கள். இதுபோலத்தான் இராமாயணத்தை மாற்றிக் கூறுபவர்களையும் கேலி செய்வார்கள்— இராமாயணமும் ஏனைய வரலாறுகளைப்போல் உண்மையான வரலாறாக இருந்தால்?

*

காலத்திற்குத் தகுந்தபடி மக்களின் கருத்திற்கேற்பச் சம்பவங்களை மாற்றிக்கூறுவது திறமையா? அல்லது காலப் போக்கை உணர்ந்து மக்கள் கருத்தையும் அறிந்து அதற்கேற்பப் புதுக் கருத்துக்களைக் கூறுவது திறமையா? உள்ளதை மாற்றிக் கூறுவதா? புதிய உண்மையை வெளியிடுவதா? எது காலத்திற்கும் மக்கள் கருத்துக்கும் ஏற்றது?

வால்மீகி

கம்பர்

துளசிதாசர்

இவர்கள்மட்டுமே கவிகள் என்று கருதியோ என்னவோ, ஆச்சாரியார், காலத்திற்கேற்பக் கருத்துக்களை மாற்றுபவன் தான் திறமை மிக்கோன் என்று கூறிவிட்டார். இந்தக் கவிகள் ஆச்சாரியாரால் நேராக அறியப்படாதவர்கள். இதோ ஆச்சாரியாராலும் நம்மாலும் நன்றாக அறியப்பட்ட—நம் காலத்திலேயே இருந்த — இருக்கின்ற இன்னொரு கவிப்பட்டியல்!

சுப்பிரமணியபாரதி

தேசிகவிநாயகம்

பாரதிதாசன்

இவர்களும் கவி பாடியிருக்கிறார்கள். ஆச்சாரியார் காலத்தில் இருந்தவர்கள் — இருப்பவர்கள் இவர்களைத் தவிர வேறு பல கவிகள் அன்றும் இருந்தார்கள் இன்றும் இருக்கிறார்கள். உதாரணத்துக்காக இவர்களைக் குறிப்பிடுகிறேன்.

வால்மீகியும், கம்பரும், துளசிதாசரும் சம்பவங்களை, மாற்றிக் கூறினார்கள். ஆனால், பாரதியும், தேசிகவிநாயகமும், பாரதிதாசனும் எந்தப் பொருளையும் மாற்றிக் கூறவில்லை. மாறாக, மக்கள் கருத்துக்கும் காலப்போக்குக்கும் ஏற்பப் புதுப் புதுக் கருத்துக்களைத் தந்து மக்களை மானத்தோடும், விழிப்போடும், சுதந்திரத்தோடும் வாழ வழி வகுத்தார்கள்.

ஆனால், வால்மீகியும், கம்பரும், துளசிதாசரும் மக்களுக்குப் புரியாததையும் தேவையற்றதையும் கூறித் தங்கள் வாழ்க்கைக்கும் புகழுக்கும் மட்டுமே வழி தேடிக் கொண்டார்கள். மக்களை ஒழுக்கம் தவறி நடக்கத்தூண்டும் பல அருவருப்பான சம்பவங்களைக் கடவுளையும் மதத்தையும் முன்னிறுத்திக் கூறி மாபெரும் கொடுமையைச் செய்தார்கள்.

எனவே, ஒரு சம்பவத்தை மாற்றிக் கூறுவது சுயநலத்தினாலும் அச்சத்தினாலும் என்பதும், புதுக் கருத்தை வெளியிடுவது பொதுநல நோக்கத்தினாலும் அதற்காக ஏற்படும் துணிவினாலும் என்பதும் மறுக்க முடியாத ஒரு உண்மையாகும், ஆச்சாரியாரே கூறுகிறார், கம்பர் பயந்து கதையை மாற்றினார் என்பதாக.

இராவணன் சீதையின் தலைமயிரையும் இடுப்பையும் பிடித்துத் தூக்கிக்கொண்டு போனான் என்று வால்மீகி கூறியதை அப்படியே கூறவேண்டுமென்ற ஆசையிருந்தும், பக்தியும் பயமும் ஏற்பட்டு, சீதையைப் பூமியோடு பெயர்த்துக்கொண்டு போனான் என்று பாடவேண்டியதாயிற்று என்பதாக ஆச்சாரியாரே கூறுகிறார் என்றால் பயத்துக்கும் துணிவுக்கும் உள்ள வேறுபாட்டையும், அக்காலக் கவிகளுக்கும் இக்காலக் கவிஞர்களுக்கும் இடையே உள்ள மனப்போக்கையும் ஆச்சசரியார் போன்றோர் உணர வேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

★

மோட்டார்காருக்கு முன்னாலும் பின்னாலும் கண்ணாடிகள் வைக்கப்பட்டிருக்கின்றன அல்லவா? இவைகள் உடைந்து சிதறாமலிருக்கும் பொருட்டு இப்போதெல்லாம் ஒரு புதுவித கண்ணாடி வைக்கப்பட்டு வருகிறது! இது, எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது என்பது ஒரு ரசமான சம்பவம், பெனடிக்டஸ் என்பவர் பிரெஞ்சு விஞ்ஞானி. அவருடைய ஆராய்ச்சிக் கூடத்திலிருந்த பாட்டில் ஒன்று ஒரு நாள் தவறி விழுந்தது. சுக்குசுக்காக உடைந்தும் போயிற்று, கண்ணாடிச் சிதறி துண்டுதுண்டாகப் போயிற்றே ஒழிய, பாட்டில் பழைய உருவத்துடனேயே இருப்பதுபோலக் கிடந்தது. இதைக்கண்ட பெனடிக்டஸ் ஆச்சரியப்பட்டு எடுத்துப் பார்த்தார். கண்ணாடியைப் போலவே, இருந்தது, அது. பிறகு யோசித்ததில், ஏதோ ஒரு ஆராய்ச்சிக்காக, சிலபொருள்களைக் கலந்து அந்தப்பாட்டிலில் வைத்திருந்தது கவனத்துக்கு வந்தது. அந்தக் கலவை, இப்படி கண்ணாடி போலிருப்பதும் — உடையாததாக இருப்பதும் தெரிந்தது. அது முதல் தான், இந்த உடையாத கண்ணாடி, கண்டு பிடிக்கும் முயற்சி அரும்பி வெற்றி பெற்றது.

4-ம் பக்கத் தொடர்ச்சி

பூனைக்கு, நித்த நித்தம் ஒரு 'கிள்ளை'யைக் கொடுத்துக்கொண்டேனும், எஜமான் சொல்வதைச் சொல்லும் கிளிப்பிள்ளை நாக நாட்டிலே இல்லை!

மனிதர்களின் தலையைச் சீவி, மண்டை ஓடுகளை மாலைகளாக்கிப் போட்டுக்கொள்ளும் மகா பயங்கரமான காட்டுமிராண்டிகள் இந்த நாகர்கள் என்று இழிமொழி பேசுவோர் உளர் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் இன்று ஈடுபட்டிருப்பது தளைகளை நொறுக்கிடும் தன்னிகரற்ற தூய பணியில் — தலைகளை வெட்டும் வேலையில் அல்ல!

நாகநாடு நாகருக்கே! என்கிறார்கள்; டில்லிக்கு வியப்பாக இருக்கிறது!

மலையும் காடும், ஒரு நாடா! பொன்னும் பொருளும் குவிந்தா கிடக்கிறது! தொழிலும் வாணிபமும் பெருகியா இருக்கிறது! மாடமாளிகை கூடகோபுரம் உண்டா! மணி அணி அணிந்திடும் சீமாட்டிகளும் அவர்தம் மஞ்சமதில் மிஞ்சு சுகம் காணும் பிரபுக்களுமா உள்ளனர்!

ஒரு டாடா, ஒரு பிர்லா, ஒரு டால்மியா உண்டா? பசும் புல் சோலை இருக்கிறது; பல பொருள் தரும் ஆலை உண்டா? பெற்றெடுத்த செல்வத்தைத் தாய்மார் முத்தமிடுவது இருக்கலாம், எழிலரசிகளின் மார்பகத்திலே புரளும் முத்து மாலைகள் உண்டா! இராஜ பவனங்கள் இல்லை! இரசாயனச் சாலைகள் இல்லை! இங்ஙனையில் உள்ளபோது, நாகநாடு நாகருக்கு என்று முழக்கமிடுகிறார்களே! என்ன பேதைமை! என்ன பேதைமை! என்று டில்லி வியப்படைகிறது. நாகர்களோ, என்னென்ன இல்லை இல்லை என்று கூறி இழித்தும் பழித்தும் பேசுகிறார்களோ, அவைகளையும் அவைகள் அனைத்தையும் மிஞ்சக் கூடியனவற்றையும் பெற்றிடும் பேராற்றல் எமக்கு உண்டு, கட்டுண்டு கிடந்தால் இழிநிலைதான் நீடிக்கும், எமக்கென்று ஓர் கொற்றம் அமைந்திடின், ஏற்றம் பெறுவோம்—இதிலே சந்தேகம் கொள்வோர் எமது கட்டுடலைக் காண்பீர், கனல் கக்கும் கண்களைக் காணீர், தோள் வலுவைக் காண்பீர், இயற்கை எமக்கென்று அளித்துள்ள ஓர் நில அமைப்பைக் காணீர், என்று கூறுகின்றனர்.

கடலில் முத்து, காட்டிலே சந்தனம், வயலில் எருதுகள், வாவியில் அன்னங்கள், ஆறுகளில் வாளைகள், அவைகளை மயக்கிடும் குவளைகள், தாமரை பூத்த குளம், தேன் சிந்தும் தோட்டம், வேழமும் வேங்கையும் ஒன்றோடொன்று போரிட்டுக் களம் அமைக்கும் காடுகள், அவைகள் மயங்கிடும் வண்ணம் பார் முழுதும் ஏர் முனையிலே என்று பண்பாடும் உழவர் தரும் செல்வம், தங்கம் இரும்பு, நிலக்கரி — காவிரி பெண்ணை, கோட்டை கொத்தளம், சிலம்பு மேகலை செழியன் வள்ளுவன், — எனும் எதை எதையோ காட்டி, திராவிடநாடு திராவிடருக்கே, என்று நாம் முழக்கமிடுகிறோம்!

புனலிடை மூழ்கி பொழிலிடை உலவி பொன்னார் இழையும் துகிலும் பூண்டு—நமது மாதர் காட்சி தருவதைக் காட்டுகிறார் புரட்சிக் கவிஞர், புல்லர்கள் இக் காட்சி கண்டு மாசுகொண்ட மனத்தினராகிவிடுவரோ என்று அஞ்சுபவர் போல, எமது தாயகத்துத் தையலர் பொன்னுடை பூண்டவர், பொழிலினில் உலவிடுபவர், ஆனால் அப்பா! அவர்கள் கனிமொழி பேசி இல்லறம் நாடும் காதல் மாதர் என்று இயல்பை எடுத்துக் காட்டுகிறார்! இவ்வளவும் கேட்டுவிட்டு, இறுமாந்து கிடக்கும் வடவர், நாக நாட்டினரின் முழக்கத்தை மட்டுமா எளிதில் கவனிப்பார்! எங்கோ ஓர் மூலையில் கிளம்பும் காட்டுக் கூச்சல் என்றுதான் அலட்சியமாகக் கருதுவர், என்றுதான் தம்பி! நீ எண்ணிக்கொள்வாய். உண்மை அதுவல்ல! நம்மைவிட, நாகநாட்டினரால் டில்லி அதிபர்களின் கவனத்தை ஈர்த்திட முடிந்திருக்கிறது மட்டுமல்ல — டில்லிக்குக் கலக்கமே ஏற்பட்டிருக்கிறது. நாடுகளிலே நல்லறிவுப் பிரசார முறைகளின் மூலம் நடைபெறும் விடுதலைக் கிளர்ச்சியை, அப்பாவிகளைத் தட்டிக்கொடுத்தும், அற்பர்களுக்குப் 'பவிஷு' கொடுத்தும், அடுத்துக் கெடுப்போரைத் தூக்கிவிட்டும், கெடுத்திட, குலைத்திட, முடிகிறது, ஓரளவுக்கேனும்! காணும் காட்சி அனைத்தும் நெஞ்சுரத்தை வழங்கும் தன்மையில் அமைந்துள்ள அந்த மலை மண்டிலத்து மக்களிடம், இந்த முறைகள் பலன் தரவில்லை!

டில்லி, புன்னகை காட்டுகிறது, பொன்னை வீசுகிறது—நாகநாடு ஏறெடுத்துப் பார்க்க மறுக்கிறது.

நண்பர்களே! நாகர்களே! எங்கே இருக்கிறீர்கள்? உங்களைக் காணவே வந்துள்ளோம் — என்று உபசார மொழி பேசுகிறது டில்லி. குன்றுகளிலே, இங்கும் அங்கும் தெரிகிறார்கள், சிறிது நேரத்தில் எல்லாக் குன்றுகளிலும் தெரிகிறார்கள். பாதைகள், மலைகளுக்கிடையில்! மலைகளுக்குத் துணையோ காடுகள்! இடையிடையே உள்ள சிற்றூர்களிலேயோ, நாகர்கள். அவர்களின் உள்ளமோ, வீரம் நிரம்பிய பெட்டகம். டில்லி திகைக்கிறது.

நாகர்களின் தலைவன் பிசோமீது டில்லி, வகைவகையான கணைகளை வீசிப் பார்த்தது. பாராளு மன்றத்தின் பளபளப்பு, இராஜபவனச் சிறப்பு, பதவிப் பசை—எதனாலும் இந்த மாவீரனை மயக்கமுடியவில்லை.

வெளிநாட்டாரின் கையாள் என்று பழி சுமத்தினர்—வெற்றுரை என்று கூறி, எள்ளி நகையாடினர் நாகர்கள்.

கிருஸ்தவப் பாதிரிமார்கள் சிலர், தூண்டிவிடும் கிளர்ச்சி இது என்றனர் — இப்பொய்யுரையைக் கூறிட உங்கட்கு வெட்கமாக இல்லையா என்று கேட்டனர், நாகர்.

நாகநாடு, வளமும் வசதியும் குறைந்த நிலையில் இருக்கிறது— நல்ல பாதைகள் — நவீன சாதனங்கள்—சமூக சேவை அமைப்புகள்— இவைகளுக்கெல்லாம் நாங்கள் பணம் தருகிறோம் வேண்டியமட்டும் —பெற்றுக்கொண்டு, நாட்டை அழகுபடுத்தி மகிழுங்கள் என்று டில்லி கூறிப் பார்த்தது. வழுக்கி விழுந்த வனிதை அல்லவா, மாலைக்கும் சேலைக்கும் மயங்குவாள். நாகர்கள், டில்லியின் உதவித் தொகையைத் தீண்ட மறுத்தனர்.

ஊராட்சி மன்றங்கள் அமைக்கிறோம்—அவைகளிலே அமர்ந்து உங்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்துகொண்டு, உரிமையைச் சுவையுங்கள் என்றனர்! கெண்டையை வீசி வராலைப்பிடித்திடும் தந்திரம் என்று கண்டுகொண்டனர்; தேர்தல்களை வேண்டாமென்றனர்.

டில்லியின் ஒப்பற்ற தலைவர்கள், 'இராணுவம்' புடைசூழப் பவனி வந்தால், காட்சி கண்டு கவர்ச்சி அடைவர் என்று எண்ணி அந்த முறையையும் கையாண்டு பார்த்தனர்—பலன் இல்லை.

பிசோ, நாகர்களை மலைச்சாரல்களில், அடர்ந்த காடுகளில், சிற்றூர்களில், திரட்டினன்—தாயக விடுதலை ஆர்வத்தை ஊட்டிய வண்ணமிருந்தான். இப்புறமிருந்து டில்லியின் படைகள் தாக்கினால், மலைப்பாதைகள்வழியாகக் காடுபல கடந்து, பர்மா சென்றனர் நாக நாட்டு விடுதலை வீரர்கள்; இந்தியாவின் நேசத்துக்குப் பாத்திரமாக இருக்கும் பர்மாவைத் தட்டிக் கொடுத்து, அங்கு தஞ்சம் புகுந்த நாகர்களைத் துரத்திப் பிடித்தது டில்லி. இந்த முறைகளால் பலன் கிடைக்காது போகவே, பிரிட்டிஷாரின் பிரித்தாளும் திட்டத்தைக் கையாண்டு, நாகர் தேசியக் கழகம் எனப்படும் பாசறையில் பிளவு ஏற்படுத்தி, அதன் பயனாக விடுதலைக் கிளர்ச்சியை நசுக்கலாம் என்று முனைந்தது டில்லி—பத்து தலைவர்கள் கிடைத்தனர் என்று மகிழ்கிறது! அவர்களையே நாகர்கள், 'துரோகிகள்' 'தூர்த்தர்கள்' என்று கூறுகின்றனர்.

இந்தப் பத்துத் தலைவர்களும், நாகநாடு கோரிக்கையை மறுக்கவில்லை! பிசோவின் பலாத்கார முறையைக் கண்டிக்கிறார்கள்! ஆனால் பிசோ பலாத்காரம் என் கொள்கை அல்ல என்று முன்பே திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

அசாம் மாகாண முதலமைச்சர் விஷ்ணுராம்மேதீ என்பவரைக் கண்டு பேசிப் பலாத்காரத்தைக் கண்டித்து, பிசோ, அறிக்கையே தந்திருக்கிறார்! எனினும் நாகர் விடுதலைக் கிளர்ச்சி என்பது பயங்கரமானதோர் பலாத்கார இயக்கம், எனவே அதனை ஒடுக்கியே தீருவோம் என்று டில்லி கொக்கரித்த வண்ணம் இருக்கிறது.

இந்நிலையிலேதான், தம்பி! பண்டித பந்த் கிளம்பினார் நாக நாட்டுக்கு. வருகிறார் அமைச்சர், வரவேற்பு வளைவுகள் அமையுங்கள் என்று அசாம் சர்க்கார் மும்முரமான பிரசாரத்தில் ஈடுபட்டனர். நாகர்களில் மயக்கத்தில் சிக்கக்கூடியவர்களைப் பிடித்திழுத்துவைத்து, பழகிய யானையைக் கொண்டு காட்டிலே யானைகளைப் பிடிக்கிறார்களாமே, அந்த முறைப்படி வேலை செய்து பார்த்தனர். நாகர் விடுதலைக் கழகமோ, அமைச்சருக்காக ஏற்பாடாகும் வரவேற்பு வைபவங்களில் யாரும் கலந்துகொள்ளாதீர்கள் என்று அறிக்கை வெளியிட்டது. நெஞ்சு உரத்தையும் நேர்மைத் திறத்தையும் கவனித்தாயா தம்பி! வருகிறவர், பெரிய தலைவராக இருக்கலாம்—புகழ்தாங்கியாக இருக்கலாம்-பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எனும் சிங்கத்தை அதன் குகைக்குள்ளே பிடரியைப் பிடித் தாட்டிய பெரு வீரனாக இருக்கலாம் — ஆனால், நாகர்களைப் பொறுத்தவரையில், அவர் வெறுக்கப்படவேண்டிய பகைவன் என்பதிலே ஐயமில்லை. ஆகவே, வரவேற்பு விழாவில் கலந்துகொள்ளாதீர்கள் என்று நாகர் தலைவன் கூறுகிறார்—டில்லி அறிக்கையே, நாகர் தலைவனின் அறிக்கை வெற்றிபெற்றது ஓரளவுக்கு என்று குறிப்பிடுகிறது. தம்பி! இதற்குப் பொருள் என்ன தெரிகிறதா! பண்டித பந்த் பவனி வந்தார் — தோரணங்களைக் கண்டார்—கொடி அலங்காரம் தெரிந்தது — அதிகாரிகள் அசடு வழிய வழிய நின்றனர் — ஆனால், நாகர்கள் சிந்தவில்லை. இஃதல்லவா நாட்டு விடுதலை உணர்ச்சி வீறுடன் இருப்பதற்கான அறிகுறி! இங்கே? எண்ணும்போது வெட்கமும் பிறக்கிறது, வேதனையும் கொட்டுகிறது. டில்லி பாராளுமன்ற உறுப்பினர், திருச்சிப் பிரமுகர், கொடை பல தந்த குணவான், பெரியாரின் பேராதரவு பெற்ற சீமான், நேரு பண்டிதர் வந்தபோது, அவருக்கு மாலை சூட்டி, மகிழ்வூட்டி, பெருமிதம் அடையத் துடியாய்த் துடித்தாராம் — மனுச் செய்து கொண்டு, மாலை தயாரித்து, மாளிகையை அலங்கரித்துவிட்டு, மாவீரன் நேரு வருகிறார், அவருக்கு மரியாதை செய்வோம் என்று ஆவலுடன் இருந்தாராம் — மனு நிராகரிக்கப் கப்பட்டது—எமது மாபெருந் தலைவருக்குத் தாங்கள் அணிவிக்க விரும்பும் மாலையை ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்பதை அறிவித்துக்கொள்கிறோம் என்று சர்க்கார் அதிகாரிகள் கூறிவிட்டனராம்!

தம்பி! மதுரம் M. P. தரும் மாலையை ஏற்றுக்கொள்ள நேரு பண்டிதருக்கு நேரம்கிடைக்கவில்லை—பாட்டுக்கார அம்மாளைக் காணவும், ஆட்டம் ஆடும் அம்மாவிடம் பேசவும் இத்தனை பெரிய தலைவருக்கு நேரம் கிடைத்தது! என்று பெரியார் பேசினது தெரிந்தபோது, எனக்குக்கூட உருக்கமாகத்தான் தெரிந்தது! ஆனால், வேறொன்றைப் பார்க்கும் போது, வேதனைதான் பிறக்கிறது! நாகநாட்டுத் தலைவரிடம் எழுந்துள்ள நாட்டுப்பற்றுணர்ச்சி, விடுதலை வேட்கை, வீராவேசம், மதுரம் அவர்களிடம் இருந்திருந்தால், மாலையும் கையுமாகவா காத்துக் கொண்டிருந்திருப்பார்! இங்கே மாலையும் கையுமாக மதுரம்! நேரமில்லை இதற்கெல்லாம் என்று கூறி அலட்சியப்படுத்தும் நேரு! தம்பி! நாகநாட்டிலே, வருகிறார் அமைச்சர்! வரவேற்று உபசரியுங்கள் என்று சர்க்கார் சங்கு ஊதுகிறது, நாகநாட்டுத் தலைவன், நமக்கு அந்த வரவேற்பிலே வேலை இல்லை என்று கூறுகிறார்; நாகர்கள் நமது விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்கும் பகைவனை நாம் வரவேற்பதா— மானக் கேடல்லவா என்று கூறுவதுபோல, வரவேற்பிலே கலந்துகொள்ளாது ஒதுங்கி விடுகிறார்கள்.

நாக நாடு! திராவிட நாடு!! ஒப்பிடும் போது, என்ன தோன்றுகிறது, தம்பி?

தம்பி! அதுமட்டுமல்ல, கோலாகலமாகப் பவனி வந்தார் அமைச்சர்—நாக நாட்டு விடுதலை வீரன், அவரைச் சட்டை செய்யவில்லை— சென்று பார்க்கவில்லை!

நாக நாடு எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பண்டித பந்த் தெரிந்துகொள்ள இதைவிட வேறென்ன வேண்டும்.

நாக நாடு நாகருக்கே! என்ற திட்டத்தை விட்டுவிடுகிறேன் (டில்லி ஆதிபத்தியத்துக்கு) இந்திய குடியாட்சிக்குக் கட்டுப்படுகிறேன் என்று வாக்களித்துவிட்டு, அமைச்சரைப் பேட்டி கண்டு பேசலாம் என்றனராம் அதிகாரிகள். பிசோ இணங்கவில்லை, என்று பத்திரிகைச் செய்தி கூறுகிறது! இணங்காததை வார்த்தைகளால்சொல்லி இருக்கமாட்டார் தம்பி! ஒரு அலட்சியமான புன்னகை மூலமே பதிலளித்திருப்பார்! பைத்யக் காரர்களே! நாக நாடு நாகருக்கே எனும் என் இதயகீதத்தை இழந்துவிட்டு, இந்த உற்சவ மூர்த்தியைத் தரிசிக்கவா? என்ன பைத்யக்காரத்தனம்! வெள்ளையனை எதிர்த்துச் சுயராஜ்யப் போர் நடத்தினீர்களாமே, உங்களுக்கு விடுதலை உணர்ச்சியின் மாண்பு விளங்காத காரணம் என்ன? கண்ணை விற்று விட்டுச் சித்திரம் வாங்குவதாம்! என்றெல்லாம் புன்னகை பேசியிருக்கும்.

"வறுமையை ஓட்டுவோம்—வாட்

டத்தைத் துடைப்போம் — புது வாழ்வு அளிப்போம்—மான்யம் தாராளமாகவும் ஏராளமாகவும் அளிக்கிறோம் — தயக்கமின்றிக் கேளுங்கள் — தனி நாடு என்ற மனப்பான்மை கூடாது—இந்தியாவில் இருந்தால் எல்லா வசதியும் கிடைக்கும் — என்றெல்லாம் பண்டித பந்த் பேசினாராம்.

அமைச்சரைச் சூழ்ந்து நின்றிருந்த அதிகாரிகள், இடையிடையே (ஏற்பாட்டின்படி) கைதட்டி ஆரவாரம் செய்திருப்பர்! ஆனால், நாகநாட்டு விடுதலை வீரன் பிசோ? எந்தக்குன்றின்மீது நடந்து சென்றுகொண்டே, வீர சுதந்திரம் வேண்டி நின்றார், பின்னர், வேறொன்று வேண்டுவரோ! என்ற பண் பாடியபடி புதிய பாசறைகளை அமைப்பதற்காக ஏறு நடை போட்டுக்கொண்டிருந்தானோ! இங்கே அலங்காரப் பந்தலின்கீழ் அமர்ந்து, அமைச்சர், படை பலம், பண பலம் ஆகியவை பற்றிப்பேசிக்கொண்டிருந்தபோது,

"தோழனே! விடுதலை கிடைத்திடும் அறிகுறி தெளிவாகிவிட்டது..."

"வீரத் தலைவனே! மெத்த மகிழ்ச்சி;என்ன அறிகுறிகண்டீர்..."

"அறியாயோ, அதனை! நம்மை அடிமைகொண்ட அரசின் தலைவருள் ஒருவன் பவனிவருகிறான், நாக நாட்டில்........"

"பெருமைக்குரியவரே! இதனையா நற்குறி என்கிறீர்! நமது தாழ்நிலையையன்றோ காட்டுகிறது இக்காட்சி"

"இல்லை, நண்பனே! இல்லை! எதேச்சாதிகாரி பவனி வருகிறான், பவனியில் நமது மக்கள் இல்லை! பேசுகிறான் பிரமாதமாக, கேட்கும் நாகர் இல்லை!"

"மகிழ்ச்சி! மகிழ்ச்சி!"

"சீந்துவார் இல்லை!"

"தாங்கள் ஊட்டிய வீரஉணர்ச்சி வீண் போகுமோ, வீரத் தலைவ!"

"சீறினர் — சிந்தை நைந்தோமில்லை! தாக்கினர், அழிந்துபடவில்லை. பிளவு மூட்டினர் — பதர் பறந்தது! மயக்க வந்தனர், மன்றத்தில் நாகர் இல்லை. மகத்தான எழுச்சி, மகத்தான உணர்ச்சி! மலைகளே கேண்மின்! வெண்மேகங்களே, காண்மின்! நாகநாடு நாகருக்கே! அந்தப் பிறப்புரிமையைப் பறித்திடப்படையும்பணமும், சிரிப்பும் சீற்றமும், பவனியும் விழாவும் பயன்படுமா, கூறுக!"

"நாக நாடு நாகருக்கே"

"ஆமாம்! நண்பனே! நாக நாடு நாகருக்கே, என்ற முழக்கம், குன்றெல்லாம் கேட்கட்டும், குறைமதியுடையோர்கள் தெளிவுபெறும் அளவுக்குக் கேட்கட்டும்! எங்கும் எழட்டும் அந்த இலட்சிய முழக்கம்."

தம்பி! இதுபோல உரையாடிக் கொண்டிருந்திருப்பர், நாகர்கள்!!

அங்கே அது! தம்பி! இங்கேநாம்,

மாலையிட வந்தபோது
எந்தன்
மன்னவன் மறுத்துவிட்டானே

என்று சோககீதம் கிளம்பக் காண்கிறோம். திரு இடமே! நாக நாட்டினைப் பார்த்தேனும் வீறுகொண்டெழு என்று கூறத் தோன்றுகிறது, பண்டித பந்த் நாக நாடு சென்று சீந்துவாரற்றுத் திரும்பிய 'சேதி'யைப் படித்தபோது. நான் மட்டும் முயன்றால் முடிகிறகாரியமா! ஆகவேதான் தம்பி! உன்னிடம் கூறுகிறேன்! தம்பி உடையான் படைக்கு அஞ்சான் அல்லவா!!

அன்பன்,

**அண்ணாத்துரை.**

# திராவிட மாணவர் முன்னேற்றக் கழக
# 2-வது மாநில மாநாடு

## சென்னையில் டிசம்பர் திங்களில் கூடுகிறது

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம், புது முறுக்கோடு—மறுமலர்ச்சியுடன் பணியாற்றவேண்டிய கட்டம். அதற்கு வேண்டிய திட்டத்தைத் திறமையோடு தீட்டவும், தியாகத் தீயில் குளிக்கவும் நம்மிடையே உள்ள தீரர்கள் ஏராளம்.

மாணவர் மாநாட்டிற்கு வரவேற்புக் குழு அமைக்கும் வாய்ப்பினை சென்னை திராவிட மாணவர் பெற்றிருக்கின்றனர்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநில மாநாட்டு வரவேற்புக் குழு, சென்னை - இராயபுரம் 'அறிவகத்'தில், 13-11-55 காலை 10 மணிக்கு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் பணியில் அக்கரை கொண்டோர்-அன்பு கொண்டோர், அத்தனை மாணவரையும் 13ந்தேதி காலை 10 மணிக்கு 'அறிவகத்'திற்கு வருகை தருமாறு அன்புகுழைத்து வேண்டிக்கொள்கிறேன்.

எல்லாக் கல்லூரிகள்மட்டுமல்ல — உயர்நிலைப் பள்ளிகள், தொழிற் கல்லூரிகள் (சட்டக் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் போன்றவைகள்) அனைத்தும் குறைந்தது 2 பிரதிநிதிகளையாவது அனுப்பி, மாணவர் கழகம் வலிவும் பொலிவும் பெற கருத்துக்கள் நல்கி ஒத்துழைக்க அருள்கூர்ந்து வேண்டுகிறேன்.

## 13-11-55 ஞாயிறு காலை 10 மணி

### 'அறிவகம்'—இராயபுரம்—சென்னை

திராவிட மாணவர்கள் நமது விடுதலைப் பட்டாளத்தின் முதல் வரிசையினர்!

அந்தப் பெருமைக்கேற்ற பெற்றி நம்மிடம் உண்டு என்பதை

நிரூபிக்கத் தவறாதீர்!

அன்பன்,

**கே. ஏ. மதியழகன்.**

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
[illegible] அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.